ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆவணி
ஆகஸ்ட்–1978



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை–600 004.

விலை 85 காசு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	**ரூ. 8**
ஆயுள் சந்தா	**ரூ. 100**
தனிப் பிரதி	**85 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், பொன்மொழிகள், மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ்நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 245 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினால், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58	ஆகஸ்ட் 1978	இதழ்—8

பொருளடக்கம்

❋❋

சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 9001 முதல் 9303 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 8ஐ ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா எண் 10,000 முதல் 10,100 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 11,000 முதல் 11,300 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை அக்டோபர் மாதத்துடன் முடிவடைகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள எண்களுக்கிடையில் உள்ள சிலர், ஏற்கனவே சந்தாவை அனுப்பிப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் புதுப்பித்துக்கொள்ளாத அன்பர்கள் கூடிய விரைவில் சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பெரும்பாலும் நமது பத்திரிகையின் எல்லாச் சந்தாதாரர்களுமே, சந்தாவைப் புதுப்பித்துக் கொள்பவர்களே ஆவர். சந்தாவைக் கூடிய விரைவில் முன்னதாகவே செலுத்துவதால் பல சங்கடங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க முடிகிறது. மேற்கொண்டு சந்தாவைத் தொடர இயலாதவர்கள், அல்லது உரிய காலத்திற்குள் சந்தாவைச் செலுத்த இயலாதவர்கள்—முன்னதாக ஒரு கார்டு எழுதித் தகவல் தெரிவிப்பது எங்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலராக வெளிவருவது வாசகர்கள் அறிந்ததே. இந்த ஆண்டு நவம்பர் மாதம் விஜயம் சிறப்பு மலராக வெளிவர இருக்கிறது.

நிர்வாகி
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 58 | காளயுக்தி ௵ ஆவணி ௴ | இதழ் 8

பிரார்த்தனை

अतसीपुष्पसंकाशं पीतवाससमच्युतम् ।
ये नमस्यन्ति गोविन्दं न तेषां विद्यते भयम् ॥

அதஸீபுஷ்பஸங்காஶம் பீதவாஸஸமச்யுதம் |
யே நமஸ்யந்தி கோவிந்தம் ந தேஷாம் வித்யதே பயம் ॥

—மஹாபாரதம், சாந்திபர்வம், 46, 118.

காயாம் பூவைப் போன்ற நிறமுடையவனும், பீதாம்பரத்தை அணிந்தவனும், அடியவர்களைத் தளர விடாதவனுமான கோவிந்தனை வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்போதும் பயமே இல்லை.

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே.

— திருப்பாணாழ்வார்

கண்ணனின் குழலோசை

ர. வேங்கடரத்தினம்



தூய வலம்புரிச் சங்கினை ஊதும் திருமால் கிருஷ்ணனாகத் தோன்றிப் புல்லாங்குழல் வாசித்த பொழுது நிகழ்ந்த அற்புதங்களைக் கேளீர் என விளித்து, விஷ்ணுசித்தர் வரிசையாகக் கூறி மகிழ் கிறார்.

வானில் திரியும் கந்தர்வர்களின் கானமெல்லாம், கண்ணனின் குழலோசை முன் நிற்க மாட்டாமல் ஒழிந்ததாம். தேவகிமைந்தன், அமரர்ஏறு, செந் தாமரைக் கண்ணன், தோள்வலி மிக்க தேவாதி தேவன் வேய்ங்குழல் எடுத்து ஊதக் கேட்ட கந்தர் வர்கள் கண்ணனின் அமுத இசை என்ற வலையில் கட்டுண்டு, சுருக்குண்டு, இசையில் மயக்கமுற்று, வெட்கமும் கொண்டு, தளர்வடைந்து ஒடுங்கிப் போயினர். ஏதும் செய்ய இயலாத நிலையில் தடுத் தாட்கொள்ளப்பட்டவர்களாக வயம் இழந்து நின் றனர்.

பெரியாழ்வார் வானைத்தாண்டி நிகழ்ந்த அற் புதம் எனப் புவியில் நிகழ்ந்ததைப் பேசுவார். பாம்புப் பள்ளியான் குழல் ஊதியபோது, இசையின் எதிரொலி தேவலோகம் வரையிலும் சென்றதாம். வேள்வியில் வழங்கப்பெறும் அவிசை உண்ணும் விண்ணவர் அதை முற்றும் மறந்து இசையின் பின்னோடு ஆயர்பாடியினுள் புகுந்து, நாவின் சுவையினைச் செவியினுள் பருகி மகிழ்ந்து, கோவிந் தனோடு பின்சென்றனராம். இடைவிடாமல் கண்ணன் பின்னோடு போய் இசையமுதம் உண்டனர்.

புவியுள்நான் கண்டதோர் அற்புதம் கேளீர்
பூணி மேய்க்கும்இளங் கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத் தணையான்குழல் ஊத
அமர லோகத் தளவும்சென் றிசைப்ப,
அவியுணா மறந்து வானவர் எல்லாம்
ஆயர் பாடி நிறையப்புகுந் தீண்டிச்
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்த னைத்தொடர்ந் தென்றும் விடாரே.

மாடுமேய்க்கும் இளங்கோபாலரின் கூட்டத்து நடுவே கண்ணன் குழல் ஊத, அமரர் நந்த கோகுலத்தில் நுழைந்து கூட்டமாய்த் திரண்டு இசையின்பம் பருகினரே! அன்று முதல் கண்ணனை விடாமல் பின்பற்றுவதாயும் பாசுரம் பேசும்.

கருங்கண் தோகைமயிற் பீலி யணிந்து
கட்டிநன் குடுத்த பீதக ஆடை,
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒரு வன்குழல் ஊதின போது
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்,
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிஅவை பெய்யும் குணமே.

பெரியாழ்வார் திருமொழியில் வரும் இந்தப் பாசுரம் கண்ணனின் மோகன கீதத்தை மரமும் செடியும் கூடச் சுவைத்து இன்புற்றதாகக் கூறும். மரங்கள் மாயவனின் மதுரகீதம் கேட்டு, அசைவின்றி நின்று தேனைத் தாரையாகப் பெருக்குமாம். செடிகள் பூக் களை உதிர்க்கும். நிமிர்ந்து நிற்கும் மரக் கிளைகள் தாழ்ந்து பணிந்து வணங்குவது போல் பாட்டிற்கு வளைந்து கொடுக்கும்; கண்ணனை நோக்கி உருகும். கிளைகள் கரம் கூப்பும். பார்த்துப் பார்த்துக் கண்ணன் நிற்கும் பக்கமாக இவ்வளவும் செய்யும் அந்த மரங்கள்!

கருத்த கண்கள் உள்ள மயிலிறகை அழகுறப் பூண்டு, பட்டாடையும் பொன்னகைகளும் அணிந்து எழிலுருவாய்த் திகழும் இடையர்கோமான் குழல் ஊதியபோது, தேவர்கள் முதல் கந்தவர் களைக் கடந்து, மரம் செடி கொடி வரையில் ஜீவ

ராசிகள் யாவுமே தம் வயம் இழந்து நின்றன என்பது ஆழ்வாரின் ரசாநுபவம்.

தும்புரு நாரதாதியர் வீணையை இனிமேல் தொடோம் என்றனராம். கின்னரர் கண்ணன் குழலோசை முன் நிற்கமாட்டாமல் தவித்தனர் என்பார் ஆழ்வார்.

குழலின் ஓசைசெவி யைப்பற்றி வாங்க
நன்ன ரம்புடைய தும்புரு வோடு
நாரதனும் தம்தம் வீணை மறந்து,
கின்ன ரமிது னங்களும் தம்தம்
கின்ன ரம்தொடு கிலோம்என் றனரே.

இசை இரட்டையர் ஆகிய கின்னரர் இசையொழிந்து போயினர். குழலின் முன் யாம் நில்லாது போயிற்றும். நாரதரும் தும்புருவும் தம் தம் கலை மறந்து போயினர்.

விலங்குகள், புள்ளினம் என்ன செய்தன? கண்ணனது இன்னிசைக்கு மரமும் செடியும் தலை வணங்கும்போது மாடும் புள்ளும் ஒதுங்கி நில்லுமோ?

பறவைக் கூட்டங்கள் கூட்டினை விடுத்துக் குழலூதிய கண்ணனை நோக்கிக் காட்டினுள் புகுந்தன. பசுமாடுகள் காலைப் பரப்பிக்கொண்டு வசதியாக அமர்ந்து இசையைச் செவிசாய்த்துப் பருகின. ஓர் ஈ வந்து அமர்ந்தால்கூடக் காதை அசைக்காமல் கண்ணனின் இன்னிசையின்பம் துய்த்தன.

கோவிந்தன் குழல்கொ டுதின போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி யாட்டகில் லாவே.

பாட்டைக் கேட்ட மான்கள் மருட்சியுற்று மேய்ந்துகொண்டிருந்ததை விடுத்து, வாயில் மெல்லும் புல் கடைவாயின் வழியே வழிய, தீட்டும் ஓவியம் என அசையாமல் நின்றனவாம்.

மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும்கடை வாய்வழி சோர,
இரண்டு பாடும்துலுங் காப்புடை பெயரா
எழுதுசித் திரங்கள் போலநின் றனவே.

குழல்கொண்டு ஊதிய கண்ணனைச் சுற்றி ஆய்ச்சியர், அமரர், மரங்கள், மான்கள், மாடுகள், புள்ளினம் யாவரும் உளர்; யாவும் உள்ளன.

மாம்பழ வாயினிலே!

கண்ணனது இன்னிசைக்கு மாடும் மரமும் மட்டுமோ அல்லது கின்னரரும் கந்தர்வரும் மட்டுமோ கட்டுப்பட்டு மற்றையோர் விடுபட்டாற் போல், மகாகவி பாரதியார் கிருஷ்ணனின் இன்னிசையினைப் பாராட்ட உற்சாகத்தோடு ஆள் சேர்ப்பார். செந்தாமரை முகமண்டலம், செந்தாமரை வாயில் செம்பவழ அதரங்கள் என்னும் பழைய வருணனைகளை விடுத்து, அழகுச் சிறுவன் கண்ண பெருமானின் இனிய குழலோசையினை அவர் வருமாறு பாடுவார்:

மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந் திடுவோம்.

கிருஷ்ணனின் மாயக்குழல் அமுதத்தை அவரும் அனுபவிப்பவர். மயக்கும் தன்மையும் தண்மையும் நிறைந்த மோகன இசை கொண்டு கண்ணன் பெண்களை ஏமாற்றுவதைத் தெரு நடுவே பார்க்கலாம்:

புல்லாங் குழற்கொண்டு வருவான் — அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே—அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.

கண்ணன் திருட்டுத்தனமாய்க் குழலை நிறுத்தி விட்டு, ஒரு காரியம் செய்திடுவான்! கண்மூடி வாய் திறந்த நிலையில் உள்ள பெண்களின் வாய் நிறையக் கட்டெறும்புகளைப் பிடித்து விட்டுவிடுவான்.

அங்காந் திருக்கும் வாய்தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்!

இதெல்லாம் பெண்களும் பொறுத்துக்கொள்ளத் தக்க விளையாட்டு. ஆனல், வேய்ங்குழல் நாதம் வெளியினின்று வரத் தொடங்கிவிட்டால் ஆயர் சிறுமியர் தவியாய்த் தவித்துப் போவர். வீட்டிலும் உள்ளம் தரியாது. உள்ளத்தை மயக்கும் மோகன கீதம் அழைக்கும்.

இசை எங்கிருந்தோ ஒலிக்கும். எங்கிருந்து ஒலி வருகிறது என்பது புரியாது. யமுனையாற்றின் தெய்விக அலைகள் எழுப்பும் அமர கீதமோ? அன்றி ஆற்றங்கரையில் அமைந்துள்ள பூம்பொழிலினின்று எழுவதோ எனத் திகைப்பர்.

அலை ஒலித்திடும் தெய்வ—யமுனை
ஆற்றி னின்றும் ஒலிப்பதுவோ ?—அன்றிக்
கலையொலிக்கும் பொழிலிடை நின்றும்
எழுவதோ இஃ தின்னமு தைப்போல்?

பெண்களைப் பித்தாக்கும் கண்ணனது வேய்ங் குழல் ஓசையைப் பாரதியார் அமுது என்றும் நஞ்சு என்றும் ஒரே அடியில் கூறுவார்:

கண்ணன் ஊதிடும் வேய்ங்குழல் தானடீ
காதிலே யமு துள்ளத்தில் நஞ்சு!
பண்ணன் றும்அடி! பாவையர் வாடப்
பாடி எய்திடும் அம்படி தோழீ!

செவிக்கு இன்னமுதாக ஒலிக்கும் கண்ணன் குழலோசை, நெஞ்சிலே நஞ்சாக வேலைசெய்கிறது என்று தோழியினிடம் நாயகி புலம்புவாள்.

காரிகையரின் உள்ளத்தில் இருப்பவன் கண்ணபிரான். அவர்களுக்கு எந்த ஒலியைச் செவிமடுத்தாலும், கிருஷ்ணன் குழல் ஊதுகிறப் போன்றதொரு மயக்கு! ஆகவே, பாரதி 'நந்தலாலா' என்ற பாடலில்,

கேட்கும் ஒலியில் எல்லாம்—நந்தலாலா—நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா

என்று பாடுவார். கண்ணபிரானின் மாம்பழ வாயினின்று எழும்பும் தீஞ்சுவைக் குழல்நாதம் எங்கும் நிறைந்து நிற்கும் பரம்பொருளின் குரலாக மங்கையர் உள்ளத்தில் கேட்கும். *

இந்து மதம்

வே. சுதாமோகன் எம். ஏ.

இந்து மதம் பொறுமைக்கும் அன்பிற்கும் அடக்கத்திற்கும் பண்பிற்கும் பழமைக்கும் எடுத்துக் காட்டாகும்.

கங்கைச் சமவெளியில் மனித நடமாட்டம் தொடங்கிய நேரத்தில் உருவாகி, சமுதாயம் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தபோது இந்துமதமும் கூடவே வளர்ந்து இன்றைய நிலையை அடைந்திருக்கிறது.

'மனிதன் எவ்வாறு வாழவேண்டும்? நல்லது எது, கெட்டது எது?' என்று அவனுக்குக் காவியங்கள் வழியாக இந்து மதம் கூறுகிறது.

"பாசத்தில் பரதனைப் போலவும், நட்பில் குகனைப் போலவும், சத்தியத்தில் அரிச்சந்திரனைப் போலவும், பண்பில் இராமனைப் போலவும், அன்பில் சிபியைப் போலவும், கடமையில் கிருஷ்ணனைப் போலவும் வாழ வேண்டும்" என்பதோடு, முறையாக வாழாவிட்டால் ஏற்படுவது என்ன என்பதையும் கூறுகிறது.

"காமத்தால் தசரதனும், குரூரத்தால் கம்சனும், உலோபத்தால் துரியோதனனும், மோகத்தால் இராவணனும், அகங்காரத்தால் சூரபத்மனும், பொறுமையால் சிசுபாலனும் கெட்டது போலக் கெட நேரிடும்" என்கிறது.

'ஏகமாகிய பரம்பொருள் ஒன்றுதான்' என்றும், 'அதுவே மக்களின் மனநிலைகளுக்கு ஏற்பப் பலவேறு தெய்வ வடிவங்களில் விளங்குகிறது' என்றும் இந்துமதம் போதிக்கிறது. மக்கள் தங்கள் விருப்பத்திற்கும் மனநிலைக்கும் ஏற்ப எந்தத் தெய்வ அம்சத்தைச் சிரத்தையுடன் வழிபட்டாலும் முடிவில் இலட்சியத்தை அடைவது உறுதி. அதற்காகத்தான், "ஆரோக்கியத்தைப் பெறச் சூரியனையும், செல்வத்தைப் பெற அக்கினியையும், ஞானத்தைப் பெறக் கலைமகளையும், சுகத்தைப் பெற விஷ்ணுவையும், ஆற்றலைப் பெற அம்பிகையையும் வணங்கு" என்கிறார்கள்.

தன்னலம் பாராட்டாமல் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடப்பது, உலக வாழ்வில் தாமரையிலை போல் இருப்பது, தன் கடமையைக் கர்மயோகமாகத் தொடர்ந்து செய்வது, தெய்வத்தினிடம் உண்மையான பக்தி செலுத்துவது போன்ற உண்மைகளை இந்து மதம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இந்து மதம் எந்தத் தவற்றையும் உண்டாக்கவில்லை. அதுமட்டுமல்ல, ஆதரிப்பதுமில்லை. அடிப்படையிலிருந்து நல்ல கொள்கைகளை வகுத்து, ஆண்டாண்டுக் காலமாகப் பழம் பெருமையைக் கட்டிக் காத்து, ஆர்ப்பாட்டமில்லாமல் இருந்து வருவது இந்து மதமாகும்.

மதத்தின் பெயரால் மக்களை வற்புறுத்துவது; அன்றாட வாழ்வில் தன் பலத்தை உபயோகிப்பது ; அரசியல், சமூகக் கட்டுப்பாடு போன்ற காரியங்களுக்கு ஆலயங்களைப் பயன்படுத்துவது போன்றவை இல்லாத மதம் இந்து மதமே. *

விஜயதீபம்

வித்தைகளின் ஆதாரம்

முண்டக உபநிஷதத்தின் முதல் மந்திரம், "எல்லா வித்தைகளுக்கும் ஆதாரமாகப் பிரம்ம வித்தை விளங்குகிறது" என்று கூறுகிறது.

பிரம்மஞானம் அடைவது ஒன்றே எல்லா ஜீவர்களும் பெற வேண்டிய முடிவான பேறு என்பதை எல்லா ஞானிகளும் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முண்டக உபநிஷதம் பிரம்ம வித்தையைப் பற்றிப் பேசுகிறது; பிரம்மஞானம் அடையும் வகையை விளக்குகிறது.

உலகில் எத்தனை எத்தனையோ வித்தைகள் அதாவது கலைஞானங்கள் இருக்கின்றன. 'ஆய கலைகள் அறுபத்துநான்கு' என்று கலைகளைப் பிரித்து வரலாற்றில் பேசப்பட்டிருக்கிறது. நவீன காலத்தில் 'அறுபத்துநான்கு' என்று கலைகளுக்கெல்லாம் ஒரு வரையறையைச் செய்துவிட முடியாது. உலகில் மனிதனின் மனம் எத்தனை எத்தனையோ துறைகளில் புகுந்து, பலவித அனுபவங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறையையும் ஒரு கலை என்று சொல்லலாம். மனித மனம் விளங்கிக்கொள்ளவே இயலாத பல துறைகள் விண்ணிலும் மண்ணிலும் நிறைந்து கிடக்கின்றன.

மின்சாரத்தைப் பல விதங்களில் நாம் பயன்படுத்துகிறோம். அதனால் விளைகிற பயன்களும் வெவ்வேறானவை. மின்சாரம் என்ற ஒரே ஆற்றலைப் பயன்படுத்தி நவீன மனிதன் வியக்கத்தக்க பல சாதனைகளைப் புரிந்துகொண்டிருக்கிறான். இவ்விதம் ஒரே மின்சாரசக்தி பலவிதங்களிலும் வெளிப்படுத்தப்படுவதைப் போல, ஒரு பெரிய சக்தி உலகமாகவும் உயிர்களாகவும் சந்திரன் சூரியன் மற்றுமுள்ள எண்ணற்ற கிரகங்களாகவும் வடிவெடுத்திருக்கிறது. உலகமாக வடிவெடுத்துள்ள இதே சக்தி, உலகிலுள்ள பல துறைகளுக்கும் கலைகளுக்கும் வித்தைகளுக்கும் ஆதாரமாக இருந்துகொண்டிருக்கிறது.

தங்கம் என்ற ஓர் உலோகத்தைக் கொண்டு பலவித ஆபரணங்கள் செய்யப்படுவதைப் போலவும், களிமண் என்ற ஒரு பொருளைக் கொண்டே பலவித உருவங்களில் மட்பாண்டங்கள் வனையப்படுவதைப் போலவும், பிரம்மம் என்ற ஒரே சக்தியை அடிப்படையாகக் கொண்டு பிரபஞ்சம் தோற்றத்திற்கு வந்திருக்கிறது. தங்கத்திற்கு வேறாகத் தங்க நகைகள் இல்லை. களிமண்ணுக்கு வேறாக மட்பாண்டங்கள் இல்லை. பிரம்மத்திற்கு வேறாகப் பிரபஞ்சமும் இல்லை.

கடைகால் அமைத்துக் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. சுவரை வைத்துச் சித்திரம் எழுதப்படுகிறது. பிரம்மாண்டமான கட்டிடங்களுக்குக் கடைகால் ஆதாரமாக இருப்பதைப் போல, அழகிய சித்திரத்திற்குச் சுவர் ஆதாரமாக இருப்பதைப் போல, உலகிலுள்ள எல்லா வித்தைகளுக்கும் ஆற்றல்களுக்கும் பிரம்மம் ஆதாரமாக விளங்குகிறது. எல்லா விதமான அறிவும் பிரம்மத்திலிருந்தே வருகின்றன, வாழ்கின்றன, முற்றுப்பெறுகின்றன.

'ஆதிபகவன் முதற்றே உலகு' என்னும் சொற்றொடர் நமக்கு மிகவும் பழக்கமானது. 'ஆதி பகவன்', உருவக் கடவுளை அதாவது சகுணப் பிரம்மத்தைக் குறிக்கிறது. உருவக் கடவுளும் அருவக் கடவுளும் உபநிஷதங்களைக் கற்றவர்களிடையே முறையே சகுணப் பிரம்மம் என்றும் நிர்க்குணப் பிரம்மம் என்றும் பொருள்படும். இரண்டும் ஒரே நாணயத்தின் இரு புறங்கள் போன்றவை. எனவே 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்று சொன்னாலும் 'பிரம்மம் முதற்றே உலகு' என்று சொன்னாலும் கூறப்படும் கருத்து ஒன்றேயாகும்.

பிரம்மமே உலகமாகத் தோற்றமளித்துக்கொண்டிருக்கிறது என்பது அத்வைத வேதாந்தத்தின் கொள்கை. இந்த உண்மை, 'ஈசாவாஸ்யம் இதம்

ஸர்வம்', 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்', 'ஸர்வம் வாஸுதேவமயம்', 'சிவமயம்' என்பன போன்ற வாசகங்களால் மீண்டும் மீண்டும் எல்லாக் காலங்களிலும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. 'எல்லாம் இறைவனே' என்னும் போது, எல்லா வித்தைகளுக்கும் ஆதாரமாக விளங்குகிறவன் அவன் ஒருவனே என்பது வெள்ளிடை மலை.

எல்லா உயிர்களின் உள்ளும் புறமும் இருந்து இயக்கும் ஓர் ஆற்றல் பிரம்மம். அந்தர்யாமி அந்தப் பரம்பொருள். உயிர் இல்லாமல் உடல் வாழ்க்கை கிடையாது. பிரம்மம் இல்லாமல் உலகில் எதுவுமே கிடையாது. ஸ்தூலம், சூட்சுமம், உயிர்க் கூட்டங்கள், ஜடப் பொருள்கள்—இப்படி நாம் உணரக் கூடியவை, ஊகிக்கக்கூடியவை, உணரவே இயலாதவை ஆகிய எல்லாமும் ஆகியிருப்பது பிரம்மம். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பது பிரம்மம்.

நிர்க்குணப் பிரம்மம், சகுணப் பிரம்மம் ஆகிய இரண்டு விதங்களிலும் மெய்ப்பொருளை ஆழ்ந்து சுவைத்தவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். அவரிடம் மாணவராக வந்து சேர்ந்த நரேந்திரர், பிற்காலத்தில் விவேகானந்தராக மலர்ந்து ஆற்றிய பணிகள் உலகப் பிரசித்தம்.

ஒரு முறை நரேந்திரர், 'கடவுள் உண்டா? இல்லையா?' என்ற சர்ச்சையில் பலமாக ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு வந்து சேர்ந்த ஸ்ரீராமகிருஷ்ணர், "என்ன, இவன் (சுவாமி விவேகானந்தர்) 'கடவுள் உண்டா? இல்லையா?' என்று வாய்கிழியக் கத்துகிறான். அப்படி ஒருவர் இல்லவே இல்லை என்று பொரிந்து கொட்டுகிறான்; விவாதிக்கிறான். நான் தான் கடவுள் இருப்பதைக் கண்முன்னால் பார்க்கிறேனே! இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு பொருளாகவும் அவன் ஆகியிருப்பதைத் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேனே!" என்று சொன்னார்.

தமது பிற்கால வாழ்க்கையில் சுவாமி விவேகானந்தர், உலகம் கண்ட மிகப் பெரிய வேதாந்திகளில் ஒருவராக விளங்கினார். வேதாந்தசிங்கமாகவே வாழ்ந்த அவர், "வேதாந்தமாகிய சிங்கம் கர்ஜிக்கட்டும்" என்று வெண்கலக் குரலில் இடி போன்று முழங்கியிருக்கிறார். இத்தகைய விவேகானந்தர், நரேந்திரராக ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்து சேர்ந்த ஆரம்பகாலத்தில் வேதாந்தத்தை, 'எல்லாம் கடவுள்' என்னும் உண்மையை ஏற்கத் தயாராக இல்லை!

அடம்பிடிக்கும் குழந்தையைச் சமாதானப்படுத்துவதற்காகத் தாய் ஒருத்தி எவ்வளவோ முறைகளைக் கையாளுகிறாள். அதைப் போலவே வேதாந்தத்தை ஏற்க மறுத்த நரேந்திரரை வழிக்குக் கொண்டு வருவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் பாடுபட்டார். பல முறைகளையும் கையாண்டார். ஆனாலும் நரேந்திரர் அவ்வளவு எளிதில் வளைந்து கொடுக்கக்கூடியவராக இல்லை. உடும்புப் பிடி விவேகானந்தர், பிற்காலத்தில் வேடிக்கையாகத் தம்மை, 'ஒரு பேய், பிசாசு, அடங்காப்பிடாரி' என்றெல்லாம் கூறியதுண்டு. இவ்விதம் எதற்கும் மசியாத நரேந்திரர், ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காக ஒரு முறை தட்சிணேசுவரம் வந்திருந்தார்.

தமது சீடர் அத்வைதக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் விருப்பம். ஆனால் நரேந்திரரோ வேதாந்தம் என்ற சொல்லைக் கேட்டமாத்திரத்திலேயே எரிந்து விழக் கூடியவராக இருந்தார். அதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு தந்திரம் செய்தார். அத்வைத நூல்களை நரேந்திரரிடம் கொடுத்து அவற்றைப் படிக்கச் சொல்வார். நரேந்திரர் அத்தகைய நூல்களைப் படிப்பதற்கு விரும்பாமல் எதிர்த்து மறுப்புச் சொல்லும்போது, "நான், நீ தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவா உன்னைப் படிக்கச் சொல்கிறேன்? நீ எனக்காகப் படித்துச் சொல். நீ படி. நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் தெரிந்து கொள்வதற்காகத்தான் உன்னைப் படிக்கச் சொல்கிறேன். மற்றபடி உனக்காக அல்ல" என்ற போக்கில் பேசி, நரேந்திரரைச் சமாதானப்படுத்திப் படிக்கச் செய்து ஸ்ரீராமகிருஷ்ணர் கேட்டுக்கொண்டிருப்பார். எப்படியாவது நரேந்திரரின் உள்ளத்தில் அத்வைதக் கருத்துக்களைப் பதியச் செய்ய வேண்டும் என்பதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் செய்த முயற்சிகளில் இதுவும் ஒன்று.

நரேந்திரர் பிரம்மசமாஜம் என்ற இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர். எனவே 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' (நான் பிரம்மம்) என்பன போன்ற அத்வைதக் கோட்பாடுகளை அவர் ஏற்கத் தயாராக இல்லை. மேலும், தமது இயல்பிலேயே பகுத்தறிவிற்கு முரண்படுகிற எதையும் அவர் துடுக்குத்தனமாக எடுத்தெறிந்து பேசக்கூடியவர்.

இத்தகையவரிடம் 'அஷ்டாவக்ர ஸம்ஹிதை' போன்ற அத்வைத நூல்களைக் கொடுத்துத் தமக்காக என்று சொல்லி நரேந்திரரைப் படிக்கச் செய்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். பொங்கி எழுந்தார்

நரேந்திரர்: "நான்தான் கடவுள் என்று சொல்வதே அபசாரம். ஏனென்றால் இந்தக் கருத்துக்களுக்கும் நாத்திகத்திற்கும் வேறுபாடே இல்லை. 'சிருஷ்டி கர்த்தாவும் நானும் ஒன்றே' என்று சொல்வதை விடவும் மிகப் பெரிய பாவம் எதுவும் இந்த உலகிலே கிடையாது. நான் கடவுள், நீயும் கடவுள், சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற இந்தப் பொருள்கள் எல்லாமும்கூடக் கடவுள்—இப்படிச் சொல்வதை விடவும் பெரிய முட்டாள்தனம் வேறு என்ன இருக்க முடியும்? இப்படியெல்லாம் எழுதி வைத்துச் சென்ற அந்த ரிஷிகள் பைத்தியம் பிடித்தவர்களாக இருந்திருக்க வேண்டும்."

சீறி வெடித்த நரேந்திரருக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் பதில்: "இந்த ரிஷிகளுடைய கருத்துக்களை நீ ஒப்புக்கொள்ள மறுக்கலாம். ஆனால் அதற்காக அவர்களை ஏன் நீ தாக்கிப் பேச வேண்டும்? மேலும், எல்லையில்லாத கடவுளின் தன்மைகளுக்கு நீ எப்படி வரையறை செய்ய முடியும்? உண்மையான கடவுளிடம் நீ பிரார்த்தித்துக்கொண்டே இரு. உனக்குப் பிடித்தமான கடவுளுடைய இயல்பில் நீ நம்பிக்கை வை."

ஆனாலும் நரேந்திரர் இதற்கெல்லாம் சளைத்துப் போய்விடவில்லை. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அத்வைத வேதாந்தத்தை அவர் கேலி செய்து பேசிக்கொண்டிருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணரும் தமது முயற்சியில் தளராமல் நரேந்திரருக்கு அத்வைத வேதாந்தத்தைப் போதித்துக்கொண்டிருந்தார்.

வழக்கப்படி ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர், 'ஜீவாத்மாவும் பிரம்மமும் ஒன்றே' என்ற கருத்தை நரேந்திரரை ஏற்கச் செய்வதற்காக எப்படி எப்படியெல்லாமோ முயற்சி செய்தார். ஆனால் பலன் ஏற்படவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இந்த முறை தோல்விதான். இருவருடைய கருத்துக்களும் ஒன்றுபடவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் இருந்த அறையை விட்டு நரேந்திரர் வெளியேறினார். அறைக்கு அப்பால் சற்றுத் தூரத்தில் பிரதாப்சந்திர ஹாஸ்ரா என்பவர் இருந்தார். அவரிடம் சென்ற நரேந்திரர், "இது எப்படி உண்மையாக இருக்க முடியும்? இந்த ஜாடியும் கடவுள்; இந்தக் கோப்பையும் கடவுள்; நாம் அனைவரும்கூடக் கடவுள்! இதை விடவும் வேறு ஒரு மடத்தனம் இல்லை." இப்படிக் கிண்டலாகப் பேசி நரேந்திரர் சிரித்தார்.

நரேந்திரரின் சிரிப்புச் சப்தம் கேட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு வந்தார். பரம்பொருளைத் தமது வாழ்க்கையில் சொந்த அனுபவத்திலேயே பல முறையும் கண்டு களித்தவர் பரமஹம்சதேவர். நரேந்திரர் தமது அறிவாற்றலைக் கொண்டு எவ்வளவுதான் அத்வைத வேதாந்தத்தைத் தவிடுபொடி செய்து பேசினாலும், ஸ்ரீராமகிருஷ்ணர் கண்ட அனுபவ உண்மைகள், சீடர் சொல்வதை ஏற்றுக் கொண்டுவிடுமா என்ன? பரமஹம்சர் நரேந்திரரின் அருகில் புன்முறுவலுடன் வந்து நின்றார். "குழந்தாய்! எதைப்பற்றி நீ பேசிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே அவரைத் தொட்டுவிட்டுச் சமாதியில் ஆழ்ந்துவிட்டார்.

பரமஹம்சதேவரின் ஸ்பரிசம் நரேந்திரரிடம் ஒரு பெரிய தெய்விகப் புரட்சியையே அமைதியாக உண்டுபண்ணிவிட்டது. 'தெய்வம் துரும்பிலும் உறைகிறது. தூணிலும் உறைகிறது' என்று பெரியவர்கள் கண்டிருந்த உண்மையை நரேந்திரர் அன்று அனுபவத்தில் கண்டார். 'கண்டவர் விண்டிலர்' என்ற அந்தப் பெரிய அனுபவத்தை, சுவாமி விவேகானந்தரின் வாய்மொழியாக இனிக் கேட்கலாம்:

"அன்று குருதேவரின் மந்திரசக்தி வாய்ந்த ஸ்பரிசம், மறுகணமே எனது உள்ளத்தில் ஓர் அற்புதமான மாறுதலை விளைவித்தது. உண்மையிலேயே இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதைக் கண்டேன்! மிக மிகத் தெளிவாக அதை நான் கண்டு திக்பிரமையால் வாயடைத்துப் போனேன். அந்த அனுபவம் என்னிடம் நீடித்து நிலைத்து நிற்குமா என்பதைக் காண்பதற்காக அமைதியுடன் கவனித்துக்கொண்டிருந்தேன்.

"ஆனால் அந்தக் கருத்து, நேரம் செல்லச் செல்லவும் அன்றைய தினம் என்னிடமிருந்து மறையவில்லை. அந்த அனுபவம் ததும்பிய நிலையிலேயே அன்று நான் வீடு திரும்பினேன். அங்கும் எல்லாம் பிரம்மமாகவே தோற்றமளித்தன. உணவு உட்கொள்வதற்காக அமர்ந்தேன். உணவு, உணவுத் தட்டு, உணவுபரிமாறியவர், உணவு உட்கொள்ளும் நான் எல்லாமே அந்த மெய்ப்பொருளாகிய பரம்பொருளேயன்றி வேறில்லை என்று கண்டேன். நான் இரண்டொரு கவளம் உணவைச் சாப்பிட்டுவிட்டு அமைதியுடன் உட்கார்ந்தபடியே இருந்தேன். 'ஏன் சாப்பிடாமல் அமைதியாக உட்கார்ந்துகொண்டு இருக்கிறாய்? சாப்பிட்டு முடி' என்று என் தாய் சொன்ன வார்த்தைகள் என்னைத் தட்டி எழுப்பின பிறகு மீண்டும் சாப்பிட ஆரம்பித்தேன்.

"என்றாலும் சதா சர்வகாலமும் உண்ணும் போதும், படுக்கும்போதும், கல்லூரிக்குச் செல்லும் போதும் அதே அனுபவம் மாருமல் இருந்துகொண்டிருந்தது. எல்லா நேரமும் ஏதோ புதுமையான ஒரு கிறக்க நிலையில் நான் இருந்துகொண்டிருந்ததை உணர்ந்தேன். வீதிகளில் நடந்து சென்றபோது வண்டிகள் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஆனால் அவற்றுக்காக வழிவிட்டு வீதியின் ஓரத்தில் ஒதுங்கி நிற்க வேண்டும் என்ற எண்ணமே எனக்குத் தோன்றவில்லை. அந்த வண்டிகளும் நானும் ஒரே பொருளால் ஆனவர்கள்தாமே என்ற உணர்ச்சி என்னிடம் நிறைந்திருந்ததுதான் காரணம்.

"என் அங்கங்களில் உணர்ச்சி இருப்பதற்கான அடையாளமே தெரியவில்லை. பாரிசவாயுவால் பீடிக்கப்பட்டு என் அங்கங்கள் ஸ்தம்பித்து மரத்துப்போக ஆரம்பித்திருப்பதாக நினைத்தேன். உணவு ருசிக்கவில்லை. நான் சாப்பிடுவதே வேறு யாரோ ஒருவர் சாப்பிடுவதைப் போல எனக்குத் தோன்றியது. சில சமயங்களில் நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே தரையில் சாய்ந்து படுத்து விடுவேன். பிறகு சில நிமிடங்கள் கழித்து மீண்டும் எழுந்து உட்கார்ந்து சாப்பிட ஆரம்பிப்பேன். இது காரணமாகச் சில நாட்களில் நான் மிகவும் அதிகமாகச் சாப்பிட்டிருப்பேன். என்றாலும் இது எனக்கு ஒரு கெடுதலையும் உண்டாக்கவில்லை. என் தாய்க்குக் கிலி ஏற்பட்டுவிட்டது. எனக்கு என்னவோ ஏதோ நேர்ந்துவிட்டது என்றும், நான் அதிக காலம் உயிர்வாழ மாட்டேன் என்றும் நினைத்து அவள் மிகவும் பயந்து போய்விட்டாள்.

"என்னுடைய இந்த மனநிலை சிறிது மாற ஆரம்பித்தது. அந்த நிலையில் இந்த உலகம் ஒரு கனவைப் போல எனக்குத் தோன்றியது. கார்ன்வாலிஸ் சதுக்கத்தில் ஒரு முறை நடந்துகொண்டிருந்தேன். அங்குப் போட்டிருக்கும் இரும்புத் தூண்கள் உண்மைதாமா அல்லது வெறும் கனவா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக, அந்தத் தூண்களில் என் தலையைக் கொண்டு பலமாக முட்டி மோதிப் பார்த்தேன்.

"இந்த நிலை சில நாட்களுக்குத் தொடர்ந்து நீடித்தது. நான் மீண்டும் பழைய சகஜ நிலையை அடைந்தபோது, இத்தனை நாட்களாக நான் அத்வைத அனுபவத்தைச் சிறிது கண்டு கொண்டிருந்தேன் என்பதை உணர்ந்தேன். அதன் பிறகு இந்துமதப் பிரமாண நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பொய்யானவையல்ல என்று எனக்குப் பட்டது. அது முதற்கொண்டு அத்வைத தத்துவத்தின் முடிவுகளை என்னால் மறுக்க முடியவில்லை."

ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் தங்கள் வாழ்க்கையிலேயே ஏராளமான அளவில் அத்வைத அனுபவங்களைப் பெற்றிருந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இலக்கியங்களில் இவற்றை விளக்கமாகக் காணலாம்.

[தொடரும்]

துறவிகளின் பாதங்கள் தீண்டும் இடத்தில் தீமைகள் மறையும்.

—பாரசீகம்



நல்லொழுக்கத்தைவிட மேலான பொருள் எதையும் தந்தை மகனுக்குத் தர முடியாது.


—முகம்மது நபி

அனலையும் புனலையும்விட அறம் அவசியம். தீயிலும், நீரிலும் மடிந்தவர் உண்டு. ஆனால், அறத்தினால் அழிந்தவர் இல்லை.

—கன்பூஷியஸ்

வெள்ளம் வருவதற்கு முன் அணைகோல வேண்டும். பெருக்கெடுத்து வந்தபின் எதுவும் செய்ய இயலாது. இதைப் போலவே சாவு வருமுன் அறம் செய்து மீட்சி பெற வேண்டும்.

—சிவப்பிரகாச முனிவர்



தெய்வச் செய்தி பரவட்டும்

சுவாமி ராகவேசானந்தா

வட ஆர்க்காடு மாவட்டம் குயிலம் கிராமத்தில் 18—6—78ஆம் நாள் நடைபெற்ற ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த உழவர் மன்றத் துவக்க விழாவில் ஸ்ரீமத் சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

"ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும். பூஜைக்கு உரியவர்களே! கண்களால் நாங்கள் நல்லதைக் காண வேண்டும். திடமான உறுப்புக்களுடனும் உடல்களுடனும் தேவர்களைத் துதித்துப் போற்றிக்கொண்டு, தேவர்களுக்கு உவப்பான ஆயுள் எவ்வளவோ அதை அடைவோமாக. பெரும்புகழ் வாய்ந்த இந்திரன் நமக்கு நன்மையை அளிக்கட்டும். எல்லாவற்றையும் அறியும் சூரியன் நமக்கு நன்மை அளிக்கட்டும். தடைப்படாத கதியுடைய கருடன் நமக்கு நன்மை அளிக்கட்டும். பிருகஸ்பதி நமக்கு நன்மை அளிக்கட்டும். ஓம். மூவகையிலும் சாந்தி நிலவுக."

இந்தப் பாடல் உபநிஷதத்தில் மனதிற்கு அமைதி வேண்டிப் பாடப்பெறும் பாடலாகும். உபநிஷதம் சொல்வதைப் போல இப்போது இங்கே இந்த இடத்தில் நாம் அனைவரும் காதுகளால் நல்லதைக் கேட்டுக்கொண்டும் கண்களால் நல்லதைப் பார்த்துக்கொண்டும் இருக்கிறோம்.

இவ்வளவு நேரமாக நீங்கள் இங்கே அமர்ந்து, ஆர்வத்தோடு இங்கே பேசப்படும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியவர்களைப் பற்றிய தெய்விகச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே நமக்கு எதிரில் இதோ அலங்காரம் செய்விக்கப்பட்டு, வழிபாடு நிகழ்த்தி அழகாகக் கொலுவீற்றிருக்கும் அந்த மூன்று தெய்வங்களின் திருவுருவங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இந்தக் குயிலம் போன்ற எளிமையான சின்னஞ்சிறிய குக்கிராமத்தில்தான் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார். அதுபோன்று அழகிய இந்தக் குயிலம் கிராமத்தில் இன்று அவருக்கு வழிபாடு நிகழ்வதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்கிறேன்.

இரண்டு வகை விடுதலைகள்

நாம் அடைய வேண்டியவை இரண்டு வகையான விடுதலைகள். அதில் ஒன்றாகிய அரசியல் விடுதலையை மகாத்மா காந்தி முதலிய தலைவர்களின் தியாகத்தால் நாம் பெற்றுவிட்டோம். ஆனால் மற்றொரு முக்கியமான விடுதலையான ஆன்மிக விடுதலையை-பேராசை, கோபம், பொறாமை இவற்றிலிருந்து விடுபடும் விடுதலையை-நாம் இன்னும் அடையவில்லை.

சுவாமி விவேகானந்தர்தாம் இந்தியாவின் புகழை முதல்முதலில் உலக அரங்கில் ஏற்றி வைத்தார். அவ்வாறு ஏற்றி வைக்க அவர் அமெரிக்காவிற்கு ஒரு பெரிய வியாபாரியாகவோ, கலைக் குழுவின் தூதுவராகவோ, அரசியல் தலைவராகவோ செல்லவில்லை. ஒரு சாதாரணச் சன்னியாசியாக, சமய உண்மைகளை ஏந்தியவராகத்தான் சென்றார். அவரே அரசியல் சார்பாகச் செல்லும் எந்த ஒரு தூதுகோஷ்டியும் சாதிக்காத அளவில் இந்தியாவின் பெருமையை உலகில் நிலைநிறுத்தினார்.

சமயமே இந்தியாவின் முதுகெலும்பு

சமய வாழ்க்கைதான் இந்தியாவின் முதுகெலும்பு என்பதை விவேகானந்தர் மிகத் தெளிவாக

உணர்ந்தார். மக்களிடம் சமய உணர்வு எழுந்தால்தான் இந்தியா உன்னத நிலைக்கு உயர முடியும் என்பதையும் திட்டவட்டமாக உணர்ந்துகொண்டார். இதை அவர் வெறும் புத்தகங்களைப் படித்தோ, அல்லது எங்கோ ஓர் இடத்தில் உட்கார்ந்து ஆராய்ச்சி செய்தோ தெரிந்துகொள்ளவில்லை. இமயம் முதல் குமரிவரை, இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை நடந்து சென்று அறிந்தார். அப்போது, எல்லாச் செல்வங்களும் நிறைந்த அரசர்களுடைய அரண்மனைகளில் தங்கினார். எதுவுமே இல்லாத அன்றாடங்காய்ச்சிகளாகிய ஏழைகளின் குடிசைகளிலும் தங்கினார். அவர்களோடு இரண்டறக் கலந்து அவர்களுடைய வாழ்க்கையின் உண்மையான துடிப்பைக் கண்டார். இந்தத் துடிப்பின் மூலம் இந்தியாவின் முதுகெலும்பாக மதவாழ்க்கை விளங்குவதைத் தெளிவாகக் கண்டார்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்து சமயத்தின் பெருமையை நிலைநாட்டிய பிறகு இந்தியா திரும்பிய விவேகானந்தர், தாம் கண்ட அந்த உண்மையை இந்தியா முழுவதும் பரப்ப ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் (Sri Ramakrishna Mission) என்ற அமைப்பை நிறுவினார். அந்தச் சங்கத்தில் தங்கள் உற்றார் உறவினர், சொத்து சுகம் எல்லாவற்றையும் துறந்து உறுப்பினர்களாகச் சேர்ந்த துறவிகளை இந்தியா முழுவதும் ஒவ்வொரு கிராமமாகச் சென்று இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் மத உண்மைகளைப் பரப்பும்படி கூறினார்.

அறுபது கோடியும் ஆறு நூறும்

ஆனால் துரதிர்ஷ்டவசமாக விவேகானந்தரின் கனவை நடைமுறையில் செயற்படுத்தப் போதுமான துறவிகள் இராமகிருஷ்ண மிஷனில் இல்லை. எண்ணிக்கையில் குறைந்த அவர்கள் தங்கள் ஆற்றலுக்கு ஏற்ப விவேகானந்தரின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்துவதில் முனைந்திருக்கின்றனர். இந்தியாவின் மக்கள் தொகை அறுபது கோடிக்கு மேல் இருக்கும்போது, உலகம் முழுவதிலும் கிளைகளை அமைத்து இயங்கி வரும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த துறவிகளின் மொத்தத் தொகையோ ஆறு நூறுகத்தான் இருக்கிறது. ஆகவே, போதுமான துறவிகள் இல்லாத நிலையில் உங்களைப் போன்ற இளைஞர்கள் பலர் சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களைப் படித்து அறிந்துகொண்டு, ஸ்ரீராமகிருஷ்ணர் பெயராலும் சுவாமி விவேகானந்தர் பெயராலும் இதுபோன்ற மன்றங்களை ஊர்தோறும் அமைத்து, அவர்களின் உபதேசங்களைப் படிக்கவும் பரப்பவும் முன்வந்தால், விவேகானந்தரின் கனவு நினைவாகும். ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பணிகளோடு உங்களைப் போன்ற இளைஞர்களின் பங்கும் இந்த வகையில் நாட்டின் ஆன்மிக எழுச்சிக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

நூல்கள் மூலமே முடியும்!

ஆன்மிக விடுதலையை-சமய உணர்வை-இந்தியாவின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் பரப்புவது என்றால் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' போன்ற பத்திரிகைகளாலும் புத்தகங்களாலும்தான் முடியும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான மகேந்திரநாத் குப்தர் என்பவர் கல்கத்தாவில் அந்தக் காலத்து உயர்நிலைப் பள்ளியின் தலைவராக இருந்தார். அவர், ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுக்குப் பகவானைப் பற்றிச் சொன்னபோது அருகில் இருந்து ஒரு வார்த்தைகூட விடாமல் எழுதிக் கொள்வார். அவர் சிறந்த எழுத்தாற்றல் படைத்தவர். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் தமது உபதேசங்களை மகேந்திரநாத் குப்தர் குறித்து வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்; உற்சாகமும் ஊட்டினார். பரமஹம்சதேவர் மறைந்த பிறகு மகேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள்வாக்குகளை ஐந்து தனித்தனி நூல்களாக வெளியிட்டார். அந்த நூல்களின் வாயிலாகப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் உலகம் முழுவதும் பரவின.

ஸ்ரீராமகிருஷ்ண கதாமிருதம்

ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் கடினமான தத்துவமயமானவையோ புரிந்துகொள்ளக் கஷ்டமானவையோ அல்ல. இங்கே பேசிய பேச்சாளர்கள் அவற்றில் சிலவற்றை உங்களிடம் கூறினார்கள். அவை மிகவும் எளிமையானவை; சின்னஞ்சிறிய கதைகள் மூலமும் உவமைகள் மூலமும் நுட்பமான ஆன்மிக உண்மைகளை அனைவரின் உள்ளத்திலும் பதிய வைக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை. அந்த உபதேசங்கள் நூல் வடிவில் 'ஸ்ரீராமகிருஷ்ண

கதாமிருதம்' என்ற பெயரில் பரவியதும் இந்தியா வில், குறிப்பாக வங்காளத்தில், ஒரு பெரும் ஆன் மிகப் புரட்சி ஏற்பட்டது. இன்று வங்காளத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் கதாமிருதம் ஒவ்வொரு வீட்டி லும் நாள்தோறும் படிக்கும் நூலாக இருக்கிறது. அந்த நூல் இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லும்படியாக இன்று வங்காளத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் கதாமிருதம் பரவியிருக்கிறது.

ஒரு முறை பக்தர் ஒருவர் தமது வாழ்க்கையில் தொடர்ச்சியாக ஏற்பட்ட துன்பங்களால் பெரிதும் வருந்தினர். எவ்வளவு முயன்றும் துன்பத்தை மறக்கவோ வேதனைகளை மாற்றவோ முடியவில்லை. அப்போது அன்னை ஸ்ரீசாரதாதேவியார் கல்கத்தாவில் தங்கியிருந்தார். பக்தர் அவரிடம் சென்று தமது வேதனையைச் சொல்லி அதைத் தீர்க்கும்படி அழுதார்.

பக்தருடைய துன்பங்களைக் கனிவோடு கேட்ட அன்னையார் அவருக்கு ஆறுதல் கூறி, ஸ்ரீராம கிருஷ்ண கதாமிருதத்தை நாள்தோறும் சிறிது நேரம் தொடர்ந்து படித்து வரும்படி கூறினர். பக்தர் அவ் விதமே செய்து வந்தார். கொஞ்ச நாட்களுக் கெல்லாம் பக்தர் தமது மனதில் ஒரு மாறுதல் ஏற் படுவதைக் கண்டார். துன்பமும் துயரமும் நிறைந் திருந்த உள்ளத்தில் மெல்ல மெல்ல அமைதியும் ஆனந்தமும் தோன்றி வளர்ந்து வருவதை உணர்ந் தார். அன்னையிடம் சென்று இந்த அதிசயமான மாறுதலைத் தெரிவித்து வணங்கி நின்றார்.

நம் வாழ்க்கையிலும் அன்றாடம் துன்பங்களும் சோர்வுகளும் பிரச்னைகளும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் அவற்றை நீக்கி நமக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

பள்ளிப் படிப்பின்போது வாழ்க்கை மகிழ்ச்சியுடன் துள்ளித் திரியும் கன்றின் ஓட்டம் போல் அமைகிறது. அதன் பிறகு அமையும் வாழ்க்கை, அதே கன்று வளர்ந்த நிலையில் வண்டியின் பாரத்தைச் சுமந்து செல்வதைப் போன்று அமைகிறது.

என்றாலும், அந்த நிலையிலும் இறைவனிடம் திட மான நம்பிக்கையுடன் வாழ்பவர்களுக்குப் பொறுப் புக்களைத் தாங்கும் துணிவும் மன அமைதியும் சாதகமான சூழ்நிலைகளும் கிட்டும். அவ்விதம் கிடைப்பதற்குக் கதாமிருதத்தில் ஏராளமான வழி முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

நெடுங்காலம் வங்க மொழியில் இருந்த ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்களை இதோ இங்கு அமர்ந் திருக்கும் சுவாமி தன்மயானந்தஜீ மகராஜ் அவர்கள் வங்க மொழியை நன்றாகப் படித்து, அதி லிருந்தே நேரடியாக அழகாகத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். அதை நீங்கள் உங்கள் ஊரில் இருக்கும் நூல்நிலையத்திலோ அல்லது சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து விலைக்கு வாங்கியோ படிக்கலாம்.

கதாமிருதத்தைப் படித்துப் பயன் பெறும்படி உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த 'ஸ்ரீராம கிருஷ்ண-விவேகானந்த உழவர் மன்றம்' இங்குள்ள மக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்று பகவானைப் பிரார்த்தனை செய்து வணங்குகிறேன்.

O O O



மனிதன் குரங்கை ஆட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்; ஆனால், மனிதனைக் குரங்கு ஆட்டுவிப்பதை நாம் பார்த்ததும் இல்லை; கேட்டதும் இல்லை. ஆனால், கிழட்டு மனக்குரங்கோ மனிதனை ஆட்டுவிப்பது கொஞ்சம் நஞ்சமன்று; இது வியப்புக்கு உரியதே!

—வடலூர் வள்ளலார்

மனம் காற்றைப் போன்றது. காற்று எப்படி மழை உண்டாகக் கூடிய மேகத்தைத் திரட்டவோ, அதை விலக்கி ஓட்டவோ வல்லதோ அது போலவே நல்ல எண்ணங்களை ஒன்றுதிரட்டவும், கெட்ட எண்ணங்களை ஒருங்கே அழிக்கவுமான இருவகைச் சக்தியும் மனதிற்கு உண்டு.

—ஓர் அறிஞர்

அருள்நெறிக் கதை :

புண்ணிய பலன்

நாடோடி



எப்படியாவது மக்களைக் கீதையைப் படிக்கச் செய்ய வேண்டும் என்பதே நம் முன்னோர்களின் கருத்து. அதை விளக்க எழுந்த கதைகளில் ஒரு கதையை மட்டும் இப்போதைக்கு இங்கே தந்திருக்கிறோம்.

முன்னொரு சமயம் ஸுசர்மா என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவனைப் போன்ற பாவி கிடையாது. அந்தணனாகப் பிறந்தும் அவன் ஜப தபம் ஒன்றிலும் ஈடுபடுவதில்லை. அவன் மாமிசம் சாப்பிடுவது உண்டு, குடிப்பதும் உண்டு.

அவன் நிலத்தை உழுதும், இலைகளைப் பறித்து விற்றும் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். வயதான காலத்தில் ஒரு நாள் இலை பறிப்பதற்காக அவன் ஒரு ரிஷியின் நந்தவனத்திற்குள் நுழைந்த போது அங்கிருந்த ஒரு பாம்பு அவனைக் கடிக்க, அவன் இறந்தான்.

இறந்த பிறகு ஸுசர்மா பல காலம் பல நரகங்களில் உழன்றான். பிறகு இந்தப் பூமியில் எருதாக வந்து பிறந்தான்.

ஒரு முடவன் அந்த எருதை வாங்கித் தினம் அதன்மீது சவாரி செய்வான். இப்படி ஏழெட்டு ஆண்டுகள் கழிந்தன.

ஒரு சமயம் முடவன் எருதை வெகு நேரம் வெகு வேகமாக ஓட்டியதனால் அது களைப்படைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தது. உடனே இறந்தும்விட்டது.

அப்பொழுதென்று ஒரு பெரிய கூட்டம் இந்தக் காட்சியைப் பார்க்க அங்கே கூடிற்று. அவர்களில் சிலர் எருதின் மீது இரக்கப்பட்டு, தாங்கள் செய்த புண்ணியத்தின் பலனை அதற்குக் கொடுப்பதாகவும், அது உயிர்பெற்று எழ வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள்.

கூட்டத்தில் ஒரு வேசியும் இருந்தாள். அவளும் தான் செய்த புண்ணியத்தின் பலனை எருதுக்குக் கொடுக்க விரும்பினாள். ஆனால் அவளுக்கு ஒரு புண்ணியமும் ஞாபகம் வரவில்லை. தான் புண்ணியம் செய்ததாகவே அவளுக்குத் தோன்றவில்லை. கடைசியில் ஏதோ ஒரு விஷயம் ஞாபகம் வர, அதன் பலனை அந்த எருதிற்காகத் தியாகம் செய்வதாகச் சொன்னாள். ஆனால் அது என்ன என்பது யாருக்கும் விளங்கவில்லை.



இறந்த எருதின் ஆவியை யமதூதர்கள் யமபுரிக்கு எடுத்துச் சென்றார்கள். அந்த எருது செய்துள்ள பாவ புண்ணியங்களைப் பற்றி அவர்கள் கணக்கெடுத்தபோது, அதற்காக வேசி செய்த தியாகத்தின் பயனாக அதற்கு நல்ல கதி கிடைத்துவிட்டது என்று சொன்னார்கள்.

அது காரணமாக எருது பூமியில் ஒரு நல்ல ஆசாரமுள்ள அந்தணர் குலத்தில் அந்தணனாகப் பிறந்தது.

இந்த அந்தணனுக்குப் பூர்வஜன்ம ஞாபகம் இருந்தது. அந்த வேசி தனக்காகச் செய்த தியாகம் காரணமாகவே தான் எருமை ஜன்மத்திலிருந்து விடுதலையடைந்த நினைவு அவனுக்கு இருந்தது.

ஆகவே அவன் ஒரு நாள் அந்த வேசியைக் கண்டுபிடித்து, "நீ எனக்காக என்ன புண்ணியத்தைத் தியாகம் செய்தாய்?" என்று கேட்டான்.

அதற்கு அந்த வேசி, ‘‘எங்கள் வீட்டில், கூண்டில் உள்ள ஒரு கிளி தினந்தோறும் ஏதோ சுலோகங்கள் சொல்லுகிறது. அந்தச் சுலோகங்கள் என் மனதைப் பரிசுத்தப்படுத்திவிட்டன. அந்தப் புண்ணியத்தைத்தான் நான் தங்களுக்குத் தானம் செய்தேன்’’ என்று கூறினாள். பிறகு இருவரும் அந்தக் கிளியைப் பார்த்து, ‘‘நீ தினம் சொல்லும் அந்தச் சுலோகங்கள் என்ன?’’ என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தக் கிளி சொல்லிற்று: ‘‘நான் பூர்வ ஜன்மத்தில் பெரிய பண்டிதனாக இருந்தேன். இருந்தும் வித்யாகர்வம் எனக்கு மிகவும் அதிகமாக இருந்தது. அதனால் மற்றப் பண்டிதர்களைப் பழிப்பதும் அவமானப்படுத்துவதுமாக இருந்தேன். அது காரணமாக நான் இறந்ததும், எத்தனையோ நரகங்களில் உழன்று, பிறகு கிளியாகப் பிறந்தேன். நான் பாவியான காரணத்தினால் சிறு வயதிலேயே என் பெற்றோர்களை இழந்தேன். ஒரு நாள் நல்ல கோடைக் காலத்தில் வெப்பம் தாங்க முடியாமல் நான் மூர்ச்சித்துக் கீழே விழுந்தேன். அப்பொழுது ஒரு முனிவர் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு ரிஷியின் ஆசிரமத்தில் விட, அவர்கள் என்னை ஒரு கூண்டில் வைத்துப் போஷித்து வந்தார்கள்.

‘‘அங்குள்ள ரிஷிகுமாரர்கள் தினம் காலையில் கீதையின் முதல் அத்தியாயத்தை ஓதுவது வழக்கம். அதைக் கேட்டுக் கேட்டு அந்த முதல் அத்தியாயம் எனக்கு நெட்டுரு ஆகிவிடவே, நானும் தினமும் காலையில் அதை ஒரு தடவை சொல்லுவது என்று வைத்துக்கொண்டேன்.

‘‘ஒரு நாள் ஒரு வேடன் என்னை அங்கிருந்து திருடிக்கொண்டு போய்விட்டான். இந்த வேசி என்னை அவனிடமிருந்து வாங்கி வளர்த்து வருகிறாள். கீதையின் முதல் அத்தியாயத்தைச் சொன்னது காரணமாக நான் முக்தியடையப் போகிறேன். அதைக் கேட்டது காரணமாக வேசியின் உள்ளமும் பரிசுத்தமடைந்துவிட்டது. அவள் ஈந்த புண்ணியம் காரணமாக ஸுசர்மா என்ற தாங்களும் பாவத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்டீர்கள்’’ என்று கிளி சொல்லி முடித்தது.

கீதையின் முதல் அத்தியாயத்தின் மகிமையைப் பற்றி மூன்று பேரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு மூன்று பேரும் தொடர்ந்து கீதையின் முதல் அத்தியாயத்தை ஓத, முக்தியடைந்தார்கள்.

ஆகவே யார் கீதையின் முதல் அத்தியாயத்தைப் படிக்கிறார்களோ அல்லது கேட்கிறார்களோ அல்லது அதன்படி நடக்கிறார்களோ அவர்கள் பவசாகரத்தைக் கஷ்டமின்றிக் கடக்கிறார்கள்.

முன்னொரு சமயம் பார்வதி தேவி பரமசிவனைப் பார்த்து, கீதையின் மகிமையைப் பற்றித் தனக்குச் சொல்லும்படி கேட்டாள். அதற்குப் பரமசிவன் கீதையின் ஒவ்வோர் அத்தியாயத்தின் மகிமையைப் பற்றியும் விஷ்ணு லக்ஷ்மிக்குச் சொன்ன கதைகளைச் சொன்னார். முதல் அத்தியாயத்தைப் பற்றிய கதை இது.

* * * * * * * * * *

கீதையின் மகிமையை விளக்கும் கதைகள் தமிழில் இதுவரை வந்ததில்லை. ஆகவே இக் கதை பிரசுரிக்கப்படுகிறது. மற்றப்படி, ‘எப்படி வாழ்ந்தாலும் பரவாயில்லை; கீதை படித்தால் போதும்’ என்பதல்ல இந்தக் கதையின் நோக்கம். சாஸ்திரங்களை வெறுமனே படிப்பதால் யாரும் மேலான நிலையைப் பெற்றதில்லை; சாஸ்திர உண்மைகளைச் சிரத்தையுடன் வாழ்க்கையில் கடைப்பிடித்தவர்களே ஆத்ம ஞானிகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. —ஆசிரியர்



‘அனைவரும் சேர்ந்து வீரியமான காரியத்தைச் செய்வோம்’ என்று உபநிஷதம் கூறுகிறது. ஒருவருக்காக மற்றவர் செய்யலாம் என்று அது கூறவில்லை. ஆகவே அவரவர் செய்ய வேண்டிய காரியங்களை அவர்களே செய்ய வேண்டும் என்பதே நமது சமயங்களின் கோட்பாடு.

—வினோபாஜி

ஆன்மிக உரையாடல்



சுவாமி துரியானந்தர்

1919 அக்டோபர் 9

ஸி: 'நான் குருமகராஜைத் தரிசித்தவன், அல்லது தூய அன்னையைத் தரிசித்தவன், (எனவே) நான் எவ்வித ஆன்மிகச் சாதனையையும் செய்ய வேண்டுவதில்லை' என்று கூறுபவர்களின் சங்கதி என்ன?

சுவாமி துரியானந்தர்: அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? அவர்களே தங்களது விவகாரத்தைச் சிறப்பாக அறிவர்.

சீடர்: சிலர் தமக்காகத் தூய அன்னையார் முழுப் பொறுப்பு எடுத்துக்கொண்டதனால், தாமாக எந்தப் பிரயாசையும் எடுக்க வேண்டியதில்லை என்றும், அன்னையே அவர்களது ஒரு கையைப் பிடித்துக் கொண்டிருப்பதனால், மற்றக் கையால் தாங்கள் விரும்பியபடி என்ன செய்தாலும் தங்களுக்கு மோக்ஷம் உறுதியாக்கப்பட்டுள்ளது என்றும் நம்பு வதைப்பற்றியே ஸி குறிப்பிடுகிறார் போலிருக்கிறது.

சுவாமி துரியானந்தர்: இந்த நம்பிக்கை ஒரு வனுக்கு ஸத்தியமாக இருந்தால் அவன் இப்போதே இலட்சியத்தை அடைந்துவிட்டவன்தான். ஆனால் இப்படிப்பட்ட நம்பிக்கை உண்டாவது எளிதா என்ன? தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளாம லிருப்பதில் ஒருவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆண்டவனிடம் பரிபூர்ண விச்வாஸம் கொண்ட வர்கள் உடனுக்குடனே அவனருளால் சுத்தீகரிக் கப்பட்டுவிடுகிறார்கள்—இதற்கு முன் அவர்கள் படு பாதகங்கள் இழைத்திருந்தாலுங்கூட. மலை போன்ற பஞ்சுக் குவியலில் ஒரு சிறு தீப்பொறியை வை. அந்த க்ஷணமே அவ்வளவும் பொசுங்கிப் போகிறது. ஆயிரம் ஆண்டுகள் ஓர் அறை இருட் டாக இருந்தாலும், அதற்குள் நீ ஒரு தீபத்தை எடுத்துச் சென்றால், இருள் சிறிது சிறிதாகவா விலகு கிறது? உடனுக்குடன் அத்தனை இருட்டும் மறையத் தானே செய்கிறது?

'மகாபாவியான ஒருவனும் என்னை அனன்யமான பக்தியுடன் வழிபடுவானாயின், அவனது அந்தச் சரியான உறுதிப்பாட்டாலேயே, அவனையும் நல்லவ னாகவே கருத வேண்டும். விரைவிலேயே அவன் தர்மவானாகி, சாச்வத சாந்தியை எய்துகிறான். குந்திபுத்திரனே, என் பக்தன் ஒருகாலும் நசிப்ப தில்லை என்று நீ திடமாகப் பிரகடனம் செய்யலாம்' என்று பகவான் கீதையில் கூறுகிறார். மாபெரும் கொடியவன் ஒருவன் ஆண்டவனிடம் தன்னை ஒப்புக் கொடுத்துக் கொண்டால் அவனையும் பக்த னாகவே கருத வேண்டும். 'விரைவிலேயே அவன் தர்மவானாகிறான்'. ஈச்வர அனுக்கிரகத்தினால் அவன் அதன் பின் கொடியோனாக க்ஷணமும் இல்லை; பக்திமானாக மாறுகிறான். நடனநிபுணரின் கதி ஒருபோதும் பிசகுவதில்லை.

பூர்வத்தில் பல தீமை புரிந்திருந்தாலும் ஒருவன் ஆண்டவனிடம் சரணாகதி செய்துகொள்வானாயின் அவனால் பிறகு பாவம் புரிவது சாத்தியமில்லாமலே போகும். கிரீஷ்பாபு செய்யாத பாவம் இல்லை. 'நான் என் வாழ்நாளில் எவ்வளவு மது அருந்தியிருக் கிறேன் என்றால், நான் குடித்த மதுப்புட்டிகளை ஒன்றன் மீதொன்றாக அடுக்கினால் அது எவரெஸ்ட் டின் அளவுக்கு உயர்ந்திருக்கும்' என்று ஒரு முறை அவர் எங்களிடம் சொன்னார். அவர் ஒரு கவியாத லால், இப்படிக் கவித்துவத்தோடு கூறினார். உண்மை யாகவே அவர் நிறையக் குடித்தார். அவரைக் காலையும் மாலையும் பகவந்நாமாவை ஜபிக்குமாறு குருமகராஜ் பணித்தபோது அவர் மறுத்தார். ''இவ்வாறு என்னால் செய்ய முடியும் என்பதில் எனக்கு உறுதி இல்லை. அந்த நேரங்களில் நான் எந்த நிலையில் இருப்பேன், எந்த இடத்தில் இருப் பேன் என்று சொல்வதற்கில்லை'' என்றார். உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைப் போஜன காலத்திலாவது

(அடுத்தப் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி:



சொர்க்கத்தின் காட்சி

பி. கிரிஜா லதா

ஸ்ரீரங்கத்தில் சத்தியகாமன் என்ற ஒரு பையன் இருந்தான். அவனைத் தூங்கச் செய்வதற்காக அவனுடைய மூத்த சகோதரி மாதவச்செல்வி நாள்தோறும் அவனுக்குப் பல கதைகளைச் சொல்வது வழக்கம். சகோதரியினிடமிருந்து சத்தியகாமன் நாகலோகம், பாதாளலோகம், சந்திரலோகம், தேவதைகளின் கதைகள் ஆகியவற்றைக் கேட்டு வந்தான்.

ஒரு நாள் மாதவச்செல்வி சொர்க்கலோகத்தைப் பற்றி வர்ணித்தாள். அதைக் கேட்ட சத்தியகாமனுக்குச் சொர்க்கத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அவன் சகோதரியிடம் சொர்க்கலோகத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி அடம் பிடித்தான். சகோதரி அவ்விதம் செய்ய இயலாது என்று எவ்வளவு எடுத்துச் சொல்லியும் சத்தியகாமன் அழுதுகொண்டே இருந்தான். அப்படியே அவன் தூங்கி விட்டான்.

தூக்கத்தில் சத்தியகாமன் ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில் பிரகாசம் பொருந்திய ஒரு தேவதை தோன்றி, "குழந்தாய், நீ சொர்க்கம் பார்க்க வேண்டுமானால் அதற்குப் பணம் தர வேண்டும். நீ சர்க்கஸ் பார்க்கப் போனால் பணம் தருகிறாய் அல்லவா? அது போலவே சொர்க்கம் பார்ப்பதற்கும் பணம் தர வேண்டும்" என்று சொல்லிற்று.

தேவதை சொன்னதைக் கேட்ட சத்தியகாமனுக்குக் கனவிலேயே ஒரு யோசனை தோன்றியது. அதாவது, தன்மீது அன்பையே பொழியும் தன் சகோதரியிடமிருந்து தேவதை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இறைவனை ஸ்மரிக்கச் சொன்னார். "இவ்வாறும் நான் தங்களுக்கு வாக்குறுதி தருவதற்கில்லை" என்று சொன்ன கிரீஷ்பாபு தொடர்ந்து, "நான் அடிக்கடி வழக்குகளில் ஆழ ஈடுபட்டுவிடுகிறேன். மற்றும் அநேக விவகாரங்களை நான் கவனித்தாகவேண்டியிருக்கிறது. எனவே இதையும் நான் செய்ய இயலாது" என்றார். இதன்பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர், "அவ்வாறெனில் என் வசமே உன் விவகாரம் அனைத்தையும் விட்டுவிடு -[Power of Attorney (பவர் ஆஃப் அட்டர்னி) என்பதாகச் சட்டபூர்வமாக ஒருவர் இன்னொருவரிடம் தம் காரியங்களைப் பொறுப்புக் கொடுப்பது போல]" என்றார். இதுபற்றிப் பிற்பாடு கிரீஷ்பாபு எங்களிடம், "நான் உடனே அவருக்குப் 'பவர் ஆஃப் அட்டர்னி' கொடுக்கச் சம்மதித்துவிட்டேன். ஆனால் பின்புதான் தெரிந்தது, பவர் ஆஃப் அட்டர்னி தருவது எவ்வளவு கடினமான காரியம் என்று. மாலையில் ஒரு முறைகூடப் பகவந்நாமத்தைச் சொல்ல இயலாது என்று கூறிய நானே, பிற்பாடு ஒவ்வொரு நொடியும் இறைவனை நினைத்தாலன்றி என்னால் ஓர் அற்பக் காரியமும் செய்ய முடியவில்லை எனக் கண்டேன்" என்றார். அபின் உண்பது என்ற தமது பதினைந் தாண்டுப் பழக்கத்தை, கிரீஷ்பாபு ஒரே நாளில் விட்டுவிட்டார். இதனால் முதல் மூன்று நாட்கள் தாம் மிகவும் அவதியுற்றதாகவும், தமது உடலே ஜடம் போல் மரத்துவிட்டதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் நான்காம் நாள் அவர் சரியாகிவிட்டார். பிற்கால வாழ்க்கையில் அவர் புகைகூடப் பிடித்ததில்லை.

கேட்கும் பணத்தை வாங்கித் தந்து சொர்க்கம் பார்க்கலாம் என்று அவன் நினைத்து கொண்டான்.

ஆனால் அவன் அப்படி நினைத்தவுடனே தேவதை அவனை நோக்கி, "நீ நினைப்ப தைப் போலப் பணம் தர வேண்டாம். சொர்க்கலோகம் பார்ப்பதற்குப் பரோபகார மனப் பான்மையையும் புண்ணியச் செயல்களையுமே பணமாகக் கொடுக்க வேண்டும். ஆகவே நீ இந்தப் பெட்டியை வைத்துக்கொள். இனிமேல் நீ எந்த ஒரு நல்ல காரியம் செய்தாலும் இந்தப் பெட்டியில் ஒரு ரூபாய் சேர்ந்துவிடும். கெட்ட காரியம் செய்தாயானால் ஒரு ரூபாய் குறைந்து போய்விடும். எப்போது இந்தப் பெட்டியில் பணம் நிரம்பிவிடுகிறதோ அப்போது நீ சொர்க்கலோகத்தைப் பார்ப்பாய்" என்று சொல்லி மறைந்துவிட்டது.

தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட சத்தியகாமன் தன் பக்கத்தில் உண்மையா கவே தேவதை குறிப்பிட்ட பெட்டி இருப்பதைப் பார்த்தான். அதைப் பார்த்ததும் அவ னுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

அன்றைய தினம் மாதத்தின் முதல் தேதியாக இருந்ததனால் மாதவச்செல்வி தான் வேலை செய்யும் காரியாலயத்தில் சம்பளம் வாங்கினாள். வீட்டுக்குத் திரும்பியபோது கடையில் ஐந்து ரூபாய் கொடுத்துத் தன் தம்பிக்காக ஒரு யானைப் பொம்மை வாங்கினாள். அந்தப் பொம்மையை அவள் சத்தியகாமனிடம் கொடுத்தபோது அவன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான். அதோடு அவனுடைய சகோதரி அவனுக்கு ஐம்பது பைசா நாண யமும் கொடுத்தாள்.

ஐம்பது பைசாவைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு சத்தியகாமன் வெளியே சென்றுகொண்டிருந்தபோது ஒரு வயோதிகன் அவனிடம் பிச்சை கேட்டான். சத்தியகாமனுக்கு அந்தப் பிச்சைக்காரனுக்குப் பைசா தருவதற்கு மனம் வரவில்லை. விரைந்து சென்றுவிடலாம் என்று நினைத்தான். அதே சமயம் அவனிடம் தந்தையைப் போன்று அன்பு செலுத்தும் அவனுடைய தமிழாசிரியர் வந்துகொண்டிருந்தார். பரோபகா ரம் செய்யும் பையன்களைக் கண்டால் அவருக்கு மிகவும் பிடிக்கும். இது சத்தியகாமனுக்கும் தெரியும். ஆகவே அவன் தமிழாசிரியரிடம் நல்ல பெயர் வாங்கலாம் என்ற எண்ணத் துடன், அவர் எதிரிலேயே அந்தப் பிச்சைக்காரனுக்குப் பைசாவைப் போட்டான். இதைக் ண்ட அவனுடைய தமிழாசிரியர் அவனைத் தட்டிக் கொடுத்து மிகவும் புகழ்ந்தார்.

சத்தியகாமன் வீடு திரும்பியதும் தேவதை தன்னிடம் கொடுத்த பெட்டியைத் திறந்து பார்த்தான். அது காலியாகவே இருந்தது. அவன் மிகவும் வருந்தினான். அந்த வருத்தத்திலேயே அவன் தூங்கியும் விட்டான்.

தூக்கத்தில் அன்றைய தினமும் அந்தத் தேவதை கனவில் தோன்றியது. அது அவனைப் பார்த்து, "குழந்தாய்! உன் ஆசிரியர் உன்னைப் புகழ வேண்டும் என்பதற்காக அவர் எதிரில் நீ பிச்சைக்காரனுக்குப் பைசா போட்டாய். அவரும் உன்னைப் புகழ்ந்துவிட் டார். பிறகு ஏன் நீ அழுகிறாய்? எதை லாபநோக்கத்தோடு செய்கிறோமோ அது வியா பாரம் ஆகுமே தவிரப் புண்ணியச் செயல் ஆகாது அல்லவா? புகழ் வேண்டும் என்று நீ பரோபகாரம் செய்ததனால்தான் உன் பெட்டியில் ஒரு ரூபாய் சேரவில்லை" என்று சொல்லி மறைந்தது.

பிச்சைக்காரனுக்குத் தன் தம்பி ஐம்பது பைசாவைத் தர்மம் செய்ததை மாதவச் செல்வி தெரிந்துகொண்டாள். ஆகவே மறுநாளும் அவள் சத்தியகாமனுக்கு ஐம்பது பைசா கொடுத்தாள். பைசாவுடன் கடைவீதிக்குச் சென்ற சத்தியகாமன் அங்கு இரண்டு பழங்களை வாங்கினான்.

அவன் வீட்டுக்குத் திரும்பியபோது தன் நண்பன் கோபாலனின் வீட்டு வழியாக வந்தான். வழியில் அவனைப் பார்த்த ஒருவர், கோபாலனுக்கு உடல்நலம் சரியில்லை என்பதைத் தெரிவித்தார். சத்தியகாமன் தன் நண்பனைப் பார்ப்பதற்காகச் சென்றான். அதே சமயம் கோபாலனைப் பார்ப்பதற்கு மருத்துவர் வந்திருந்தார். அவர் கோபாலனுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தைக் கொடுத்துவிட்டு, "இவன் சாப்பிடுவதற்கு இன்று பழம் வாங்கிக் கொடுங்கள்" என்று கோபாலனின் தாயிடம் சொல்லிச் சென்றார்.

கோபாலன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆகவே அவனுடைய தாய், "நானே கூலிவேலை செய்து பிழைப்பவள். அதுவும் இப்போது பிள்ளைக்கு உடம்பு சரியில்லாததால் இரண்டு நாளாக நான் வேலைக்கே போகவில்லை. பணம் காசு இல்லாத நிலையில் நான் எப்படிக் கோபாலனுக்குப் பழம் வாங்கிக் கொடுக்க முடியும்?" என்று சொல்லிக்கொண்டே அழுதாள்.

சத்தியகாமன் தன்னிடம் இருந்த இரண்டு பழங்களைக் கோபாலனின் அம்மாவிடம் கொடுத்தான். அவள் அவற்றைப் பெற்றுக்கொண்டு சத்தியகாமனை வாழ்த்தினாள்.

சத்தியகாமன் தன் வீட்டுக்கு வந்ததும் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் இரண்டு ரூபாய் நாணயம் ஒளிவிட்டது!

ஒரு நாள் சத்தியகாமன் யானைப் பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டிருந்தபோது அவனுடைய தங்கை அங்கே வந்தாள். அவன் தன் தங்கையைப் 'பாப்பா' என்று கூப்பிடுவான். பாப்பா யானைப் பொம்மையை விளையாடுவதற்காக எடுத்தாள். சத்தியகாமன் அதைத் தடுத்தான். அவள் யானைப் பொம்மை வேண்டும் என்று தொந்தரவு செய்தாள். சத்தியகாமன் தங்கையை அடித்துவிட்டான். பாவம்! அவள் அழத் தொடங்கினாள்.

விளையாட்டு முடிந்ததும் சத்தியகாமன் வீட்டுக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து பார்த்தான். முதலில் சேர்ந்திருந்த பணம் அதில் இல்லை. அவனுக்குத் தங்கை அழுதது நினைவிற்கு வந்தது. அதோடு அவன் மனம் தங்கைக்காக நெகிழவும் செய்தது. 'இனிமேல் கெட்ட காரியம் செய்வதில்லை' என்று நிச்சயப்படுத்திக் கொண்டான்.

எப்படி ஒருவன் தீய காரியங்களைச் செய்கிறானோ அப்படியே அவனுடைய குணமும் தீயதாக மாறிவிடுகிறது. அதிலேயே அவனுக்குத் துன்பமும் உண்டாகிறது. மனிதன் நல்ல காரியங்களில் ஈடுபடும்போது அதற்கேற்ப அவன் மனமும் நல்ல பண்புகளைப் பெறுகிறது. அதிலேயே அவனுக்கு இன்பமும் ஏற்படுகிறது. சத்தியகாமன் முதலில் புகழுக்காகக் காரியம் செய்தான். பிறகு அவனிடம் இருந்த நல்ல குணம் காரணமாகவே நல்ல காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். அவ்விதம் அவன் செய்த நல்ல செயல்களின் பலனாக அந்தப் பணப்பெட்டி நிரம்பிவிட்டது.

ஒரு நாள் அவன் பணப்பெட்டியை எடுத்துக்கொண்டு சொர்க்கலோகம் காண வேண்டும் என்ற ஆசையுடன் ஒரு மரத்தடியில் சென்று அமர்ந்தான்.

அப்போது பக்கத்தில் இருந்த வேறொரு மரத்தடியில் சாது ஒருவர் அழுது கொண்டிருந்ததைச் சத்தியகாமன் கண்டான். அவரை நோக்கி ஓடிச் சென்று, "தாத்தா, ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.

சாது அவனிடம், "தம்பி, உன் கையிலுள்ள பெட்டியைப் போல என்னிடமும் ஒரு பெட்டி இருந்தது. நீண்ட நாளாக மிகவும் கஷ்டப்பட்டு நான் அதில் பணம் நிரப்பி னேன். அந்தப் பணத்தைக் கொண்டு சொர்க்கலோகம் பார்க்கலாம் என்ற ஆசை யுடன் இருந்தேன். ஆனால் இன்று நான் காவிரியில் குளித்தபோது அந்தப் பெட்டி தண்ணீரில் விழுந்துவிட்டது" என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடனே சத்தியகாமன் எந்தவிதத் தயக்கமும் இலலாமல், "தாத்தா, நீங்கள் அழாதீர்கள். என்னிடம் உள்ள இந்தப் பெட்டியிலும் பணம் நிரம்பி யிருக்கிறது. இந்தப் பெட்டியை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

அதற்குச் சாது, "நீயும் கஷ்டப்பட்டு இந்தப் பெட்டியில் பணம் சேர்த்திருக் கிறாய். இப்போது அதை என்னிடம் கொடுத்துவிட்டால் உனக்குத் துன்பமாக இருக்குமே!" என்று கேட்டார்.

"இல்லை தாத்தா, எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. நான் மகிழ்ச்சியுடனேயே இந்தப் பெட்டியை உங்களுக்குத் தருகிறேன். நான் சிறுபையன். எவ்வளவு காலம் நான் இந்த உலகில் வாழப்போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. நீங்களோ வயதானவர். உங்களால் இன்னொரு பெட்டியை நிரப்ப முடியுமோ முடியாதோ; ஆகையால் தாங்கள் இந்தப் பெட்டியைத் தயவுசெய்து மறுக்காமல் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிச் சத்தியகாமன் தன் பெட்டியைச் சாதுவிடம் கொடுத்தான்.

சாதுவின் வடிவில் வந்திருந்த தேவதை, சத்தியகாமனின் கண்களில் கையை வைத்து மூடியது. உடனே சத்தியகாமனுக்குச் சொர்க்கத்தின் காட்சி தெரிய ஆரம் பித்தது. அந்தச் சொர்க்கம் மாதவச்செல்வி வர்ணித்த சொர்க்கத்தைவிடப் பல மடங்கு அழகு வாய்ந்ததாகக் காணப்பட்டது.

சத்தியகாமன் கண்ணைத் திறந்து பார்த்தான். எதிரில் அவன் கனவில் கண்ட தேவதையே பிரத்தியட்சமாக நின்றுகொண்டிருந்தது. "குழந்தாய், யார் நல்ல காரியங் களைச் செய்கிறார்களோ அவர்களுக்குச் சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து வைத்து நான் காத்திருக்கிறேன். நீ இப்போது போலவே உன் வாழ்க்கை முழுவதும் பரோப காரச் செயல்களையே செய்து வந்தால் நிச்சயம் சொர்க்கத்தை அடைந்துவிடுவாய்" என்று சத்தியகாமனிடம் சொல்லிவிட்டு அந்தத் தேவதை மறைந்தது.

'புண்ணியச் செயல்கள் செய்வோர் நற்கதி பெறுவர்' என்னும் உண்மையின் அடிப்படையில் எழுந்த ஒரு கற்பனைக் கதையே இது. ★★

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

தியானம், ஜபம் ஆகியவற்றை எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் செய்து வரலாம். தியானத்தில் சித்தி (பரிபூரண நிலை) பெற்றவர்கள் தங்கள் மனதை உள்ளே இழுத்துக் கொள்வதன் மூலம் சந்தைக் கடைகளின் இரைச்சலுக்கு இடையிலும் முழுத் தனிமையை உணர முடியும். ஆகவே அவர்களின் ஒருமுகப்பட்ட மனநிலையை எதுவும் பாதிக்காது. இன்பத்திலும் துன்பத்திலும், செல்வத்திலும் வறுமையிலும், புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் அவர்களின் மனநிலை சமமாக இருக்கும். இத்தகையவர்களே கீதையில் நிலைத்த புத்தியுடையவர்கள் (ஸ்திததீ:) என்றும், பரம்பொருளை அறிந்தவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளனர்.

* * *

இதைப் போலவே ஜபத்தில் சித்தியடைந்துள்ளவர்கள் விஷயத்தில் அவர்களின் ஒவ்வொரு மூச்சிலும் (உள்ளிழுத்தல், வெளிவிடுதல் ஆகியவற்றில்) தானாகவே ஜபம் நடைபெறுகிறது. அவ்விதம் அவர்கள் ஜபம் செய்வதற்கு முயற்சி எதுவும் செய்ய வேண்டியிருப்பதில்லை. இதுவே **அஜபா ஜபம்** (மந்திரம் தானாகவே உள்ளத்திலிருந்து எழுந்தபடி இருப்பது) எனப்படும். தொடர்ந்து பழகியதன் மூலம் இந்த நிலையைப் பெற்றவர்களின் மனம் ஜபத்தில் உறுதியாக நிலைத்துவிடுகிறது. அதனால் அவர்கள் உரையாடிக்கொண்டோ வேறு ஏதோ வேலையில் புறத்தளவில் ஈடுபட்டிருந்தாலுமோகூட, இஷ்ட தெய்வத்தின் மந்திரம் அவர்களின் உள்ளத்தில் சதா சர்வகாலமும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மேலும் அந்த நிலையில் அவர்களுக்கு விருப்பம் இருந்தால் பேசிக் கொண்டிருக்கும்போதும் ஏதாவது வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போதும் ஜபமாலையை உருட்டியும் ஜபம் செய்வார்கள். இதை அவர்கள் உலக மக்களின் நன்மைக்காகவே செய்கிறார்கள். அவர்களுடைய இந்தச் செயல், புரட்டர்களும் வைஷ்ணவர்கள்* என்று தங்களைப் பிரகடனம் செய்து கொள்ளும் வேஷதாரிகளும் காய்கறிகளையும் மற்றப் பண்டங்களையும் பேரம் செய்து வாங்கும்போது, தங்களுடைய மத ஈடுபாட்டை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகச் சப்தம் வருவதைப் போல ஜபமாலையை உருட்டுகிறார்களே, அதைப் போன்ற ஒரு செயல் அல்ல! தியானசித்தராகிய ஒரு மகாபுருஷரும் ஜபசித்தராகிய ஒரு மகாபுருஷரும் ஒரேவிதமான உயர்ந்த நிலையைத்தான் அடைந்திருக்கிறார்கள். இந்த இரண்டு வகையினரும் பெற்றுள்ள உயர்ந்த நிலை–தீவிரமாக ஆன்மிகச் சாதனைகளைப் பழகுவது, மன அடக்கம், தொடர்ந்து முயற்சியில் தளராமல் சாதனை பஜனைகளில் ஈடுபடுவது, பிரார்த்தனை—ஆகியவற்றை மேற்கொண்டதன் இறுதி விளைவே ஆகும். "தியானத்தில் சித்தி பெற்றவனுக்கு முக்தி உடைமை ஆகிவிடுகிறது."

* வங்காளத்தில் சில வைஷ்ணவர்கள் இவ்விதம் இருக்கிறார்கள்.

* * *

ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றி மூச்சுக் காற்றை உள்ளே இழுக்கும்போதும் வெளியே விடும் போதும் சமமாகவும் மென்மையாகவும் வைத்திருப்பது பிராணாயாமம் எனப்படும். அதாவது பிராணவாயுவை அடக்குவது பிராணாயாமம் ஆகும். நீண்ட காலம் சரியான முறையில் ஒழுங்காகப் பிராணாயாமம் செய்து வந்தால் மனம் அமைதியடைகிறது; மனதை எந்தப் பொருளின்மீது செலுத்துகிறோமோ அந்தப் பொருளின்மீது ஒருமுகப்பட்டு நிற்கிறது; அந்தப் பொருளைப் பற்றிய பரிபூரண ஞானமும் அடையப்படுகிறது. இதுவே முக்கியமாகப் பிராணாயாமத்தின் ஆன்மிகப் பலன் ஆகும். உடலின் மீதும், மனதின் மீதும் ஏற்படும் பயனும் ஆச்சரியமானதாகும். இதனால் உடல் நல்ல ஆரோக்கியத்தைப் பெறுகிறது, வலிமை பெறுகிறது, பிரகாசம் (காந்தி) பெற்றதாகிறது. மனமும் உற்சாகம், அமைதி, பொறுமை, தைரியம், திடசங்கல்பம் பொருந்தியதாகிறது; குன்றாத மன வலிமையும் ஈர்க்கும் கவர்ச்சிசக்தியும் நிறைந்ததாகிறது. இதனால் மனதை எந்தக் காரியத்தில் ஈடுபடுத்தினாலும் அந்தக் காரியம் நன்கு நிறைவேறுகிறது. பிராணாயாமம் பழகியதன் விளைவாக நீண்ட ஆயுளையும் பல அசாதாரணமான சித்திகளையும் யோகிகள் பெறுகின்றனர். ஆனால் இந்தச் சித்திகள் பாரமார்த்திக இலட்சியத்தை அடைவதற்கு மிகப் பெரும் இடையூறுகளாகும்.

* * *

எட்டு நாட்கள்


பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த மகான்களுள் ஏகநாத் என்பவரும் ஒருவர். அவரைப் பற்றிக் கேள்வியுற்ற ஒருவன் நேரில் சென்று அவரைத் தரிசித்தான். அந்த மகானின் வாழ்க்கையில் காணப்பட்ட எளிமையும் இனிமையும் அவனைப் பிரமிக்க வைத்தன. ஏகநாதருடைய முகத்தில் தெய்விகம் ததும்பும் தெளிவு இருந்தது. அது, பிரச்னையோ குழப்பமோ இல்லாத வாழ்க்கை அவருடையது என்பதை அறிவித்தது.

ஆகவே அவன் ஏகநாதரிடம், "சுவாமி, தங்கள் வாழ்க்கையில் அமைதியும் அழகும் பூத்துக் குலுங்குவதைப் பார்க்கிறேன். எந்தவிதச் சஞ்சலமும் இல்லாமல் தெளிந்த நீரோடையைப் போல் உங்களால் எப்படித்தான் இந்த உலகில் வாழ முடிகிறதோ தெரியவில்லையே! எளிமைக்கும் பரிசுத்தத்திற்கும் இலக்கணமாக அல்லவா உங்கள் வாழ்க்கை அமைந்திருக்கிறது? ஆனால் உலகத்தவராகிய நாங்களோ வாழ்வில் எப்போதுமே பல நூறு பிரச்னைகளால் அமிக்கப்பட்டுத் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிறோம். அமைதியான உங்கள் வாழ்க்கை எங்கே? பூகம்பமும் சூறாவளிகளும் நிறைந்த எங்கள் வாழ்க்கைதான் எங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இருக்கிறது! பிரச்னைகளால் உங்கள் மனம் பாதிக்கப்பட்டிருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் எங்களையோ குழப்பம், பகை, வெறுப்பு, ஆணவம் என்று இருக்கப்பட்ட எல்லா விதமான தீய சக்திகளும் சதா சர்வகாலமும் பிடுங்கித் தின்றுகொண்டிருக்கின்றன. தங்களுடையதைப் போன்று அமைதி ததும்பும் நல்ல ஒரு வாழ்க்கை எங்களுக்கும் கிடைப்பது சாத்தியமா? நான் தங்களைப் போல வாழ விரும்புகிறேன். அதற்கு உரிய ஏதாவது ஒரு வழியைச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்றான்.

அவன் சொன்னதைக் கவனத்துடன் கேட்ட ஏகநாதர் பதில் சொன்னார்: "அப்பா! நீ இப்போது நினைப்பதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். உடனடியாக உனக்கு முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அதாவது உனக்கு மரண காலம் நெருங்கிவிட்டது. இன்னும் எட்டே நாட்களில் நீ இறந்து போக இருக்கிறாய்."

ஏகநாதரின் பதில் அவனைத் திடுக்கிட வைத்தது. மரணத்தை நெருங்கிவிட்டோம் என்ற எண்ணமே அவனுடைய முழு உள்ளத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டது. அதுவே காரணமாக அவனுடைய மனநிலை அசாதாரணமான ஒரு பெரிய மாறுதலுக்கு உட்பட்டது. மேற்கொண்டு அவன் ஏகநாதரிடம் எதுவும் பேசாமல் விடைபெற்றுக் கொண்டான். "ஐயோ! இன்னும் எட்டே நாட்கள்தாம் இருக்கின்றன! இன்னும் எட்டே நாட்களில் நான் செத்துப் போக இருக்கிறேன்" என்று தனக்குத் தானே முணுமுணுத்துக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான்.



அவன் மனைவியை அழைத்து, "அன்பே! உன்னை நான் எத்தனை எத்தனையோ விதங்களில் துன்புறுத்தியிருக்கிறேன். அதன் பொருட்டு வருந்தி மன்னிப்புக் கேட்கிறேன். இன்னும் எட்டே நாட்களில் என் வாழ்வு முடிந்துவிடப் போகிறது. இதுவரையிலும் இல்லாததையும் பொல்லாததையும் பேசி உன் மனதை எவ்வளவோ நோவச் செய்ததற்காகவும், உனக்கு இழைத்த கொடுமைகளுக்காகவும் நான் வருந்தி மன்னிப்புக் கேட்கிறேன். என் தவறுகளை மறந்து என்னை மன்னித்துவிடு" என்று கேட்டுக்கொண்டான்.

தன் குழந்தைகளை அழைத்து அவர்களை அன்புடன் தழுவிக்கொண்டான்: "என் செல்வங்களே! இப்போதாவது உங்களை நான் கட்டியணைத்துக் கொள்கிறேன், உங்களை நான் வீணாகக் கோபித்து எத்தனையோ தடவை அடித்திருக்கிறேன், திட்டி

யிருக்கிறேன். என் கதை எட்டு நாட்களுக்குள் முடியப் போகிறது. உங்களிடம் நான் நடந்து கொண்ட முறையை நினைத்து வருந்துகிறேன். என்னை நீங்கள் அனைவரும் மன்னித்துவிடுங்கள்.''

அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், தன் நண்பர்கள், உற்றார் உறவினர் ஆகிய அனைவரிட மும் சென்று அவன் தன் மரணகாலம் சமீபித்து விட்டதைத் தெரிவித்தான். அவன் யார் யாரிடம் சண்டை சச்சரவுகள் செய்திருந்தானோ அவர் களில் ஒவ்வொருவரையும் அணுகி, ''அன்பரே! உங்களிடம் நான் நடந்துகொண்ட முறைகளை நினைக்கும்பொழுது நான் படும் துயரம் சொல்லி மாளாது. இன்னும் எட்டே நாட்கள் நான் வாழப் போகிறேன். மரணதேவன் என் தலையில் கை வைத்தாகிவிட்டது. எட்டு நாட்களுக்குள் இந்த என் வாழ்க்கை அஸ்தமித்துவிடும். நான் உங்களிடம் சண்டை போட்டிருப்பதற்காக என்னை மன்னி யுங்கள்'' என்று தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

இது போலவே தன் அடாத செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள், தன்னால் பகைமை பாராட்டப் பட்டவர்கள் ஆகிய அனைவரிடமும் சென்று தன் செயல்களுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரினன்; மரணகாலம் நெருங்கி விட்டதைத் தெரிவித்தான்.

எட்டாவது நாள் வந்தது. அவனுடைய வீட்டுக்கு ஏகநாதர் சென்றார். அவரைக் கண்டதும் அவன் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்தான். ''சுவாமி! எனக்கு மரணகாலம் வந்துவிட்டதா?'' என்று கேட்டான்.

ஏகநாதர், ''அதைப் பற்றிய உண்மை அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். அது சரி, உன்னை நான் ஒன்று கேட்க வேண்டும்: இந்த எட்டு நாட் களையும் நீ எப்படிக் கழித்தாய் என்பதை எனக்குச் சொல். எத்தனை பேரைத் திட்டினாய்? எவ்வளவு பேருடன் சண்டை போட்டாய்? எத்தனை பேரை நீ மனம் நோக வைத்தாய்? எவ்வளவு பேரை அவமானப்படுத்தினாய்?'' என்று கேட்டார்.

அவன் பதில் சொன்னான்: ''சுவாமி! இந்த எட்டு நாட்களும் மரணம்தான் என் கண்முன் நின்று கொண்டிருந்தது. இந்த மன நிலையில் நான் பிறரைத் திட்டுவதாவது, சண்டை போடுவதாவது! அதற் கெல்லாம் எனக்கு நேரம்தான் ஏது? நான் சண்டை போட்டிருந்த அத்தனை பேரிடமும் சென்று என்னை மன்னிக்கும்படித்தான் இந்த எட்டு நாட்களும் கேட்டுக்கொண்டிருந்தேன். தங்களைச் சந்தித்துப் பேசிய அந்த க்ஷணம் முதல் இன்று வரையிலும் எந்தவிதச் சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடாமல் மிகவும் நல்ல முறையில் கழித்திருக்கிறேன்.''

அவன் சொல்லி முடித்தவுடன் ஏகநாதர் சொன்னார்: ''அன்பனே! இந்த விந்தையைப் பார். கடந்த எட்டு நாட்களும் நீ மரணத்தையே நினைத்துக்கொண்டிருந்திருக்கிறாய். அது காரண மாகவே மிகவும் நல்ல முறையிலும் பிறருக்குப் பயன் படும் வகையிலும் நீ வாழ்ந்திருக்கிறாய் என்பதை அறிகிறேன். என்னைப் போன்றவர்களின் நிலை என்ன தெரியுமா? நாங்கள் எங்களுடைய வாழ்நாள் முழு வதும் ஒவ்வொரு கணமும் சதா சர்வகாலமும் மரணத்தையே நினைவில் பதித்து வாழ்கிறோம். அத னால்தான் எங்களால் அமைதியுடன் வாழ முடிகிறது.

''நாம் இந்த உடலில் எவ்வளவு காலம் வாழப் போகிறோம், சொல்? வாழ்க்கையில் எது நிச்சயமாக நடக்கப் போகிறதோ இல்லையோ, நமது இந்த உடல் விரைவிலோ சற்றுக் காலம் தாழ்ந்தோ என்று வது ஒரு நாள் அழிந்து மண்ணோடு மண்ணாகப் போகிறது என்பதுதான் நிச்சயத்திலும் நிச்சயம். ஆகவே நாம் அழியும் உடலில் பற்று வைக்காமல், அழியாத பொருளாகிய ஆண்டவனிடமே பற்று வைத்து வாழ வேண்டும். அதாவது, எந்த நிலை யிலும் நாம் உடலுக்கு அடிமை ஆகிவிடாமல் ஆண்டவனுக்கே அடிமையாக விளங்க வேண்டும்.

''பிறரிடம் பகை பாராட்டாமல் அன்பு பாராட்டு பவர்களாகவே இருக்க வேண்டும். சொல் செயல் சிந்தனைகளில் தார்மிகம் வாழ்க்கையில் பொதிந்து விளங்க வேண்டும். பிறர் மனம் புண்படும்படி பேச லாகாது. யார் ஒருவரையும் சொல் செயல் சிந்தனை களால் துன்புறுத்தாமல் இனிமையுடன் பேசிச் சுய நலமின்றி அன்புடன் தொண்டு செய்ய வேண்டும். நம்மிடம் இருப்பதை முகம் சுளிக்காமல் முகமலர்ச்சி யுடன் அனைவருக்கும் வழங்க வேண்டும்.

''இதைப்பற்றிச் சற்றுச் சிந்தி: நம்மிடம் உள்ள திறமைகள், பொருள்கள் நமக்குச் சொந்த மானவையே அல்ல; இறைவனுக்கே அவை சொந்தமானவை. கடவுள் நம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மற்றவர்களுக்குக் கிடைக்கச் செய் வதற்காக அவற்றை நம்மிடம் கொடுத்து வைத்

திருக்கிறார் என்று நினைத்துப் பிறருக்கு மனமுவந்து வழங்க வேண்டும். ஆண்டவன் தனக்குச் சொந்த மான பொருளை நம்மிடம் கொடுத்து வைத்திருக்கும் போது, அதில் ஒரு பகுதியைக் கோரி நம்மிடம் வரும் ஆண்டவனின் குழந்தைகளுக்கு 'இல்லை' என்று சொல்ல நமக்கு உரிமையே இல்லை. ஆண்ட வனுக்கு உரிய பொருளை அவருடைய குழந்தை களுக்கே தர மறுப்பது எப்படி நியாயமாகும்? ஆண்டவனை நேசிக்கும் நாம் அவருடைய குழந்தை களையும் நேசிக்காமல் வெறுக்கவும் பகைமை பாராட்டவும் செய்வது எப்படி நேர்மை ஆகும்?

"அழியும் இந்த உடலைப் பிறருக்குப் பயன்படும் காரியங்களில் ஈடுபடுத்த வேண்டும். பரோபகாரார்த் தம் இதம் சரீரம். மின்னலைப் போன்று நமது உடல் மறைந்து போவதற்குள் தெய்வத்தை அடைய விரும்பும் ஒரு சிலருக்காவது நாம் எந்த விதத்தி லாவது உதவி செய்ய இயலுமானால் அது எவ்வளவு பெருமைக்கு உரியதாக இருக்கும்! நீர்க்குமிழி போல் உடல் வாழ்க்கை மறைவதற்குள் ஒரு சிலருக் காகிலும் ஒருசிறிதளவேயாயினும் நன்மை விளை விக்க இயலுமானால், அமைதியையும் ஆறுதலையும் தர முடியுமானால்—அதுவே போற்றத் தக்கதாகும். என்றைக்குப் பிறந்தோமோ அன்றைக்கே மரணம் வரப் போவதும் உறுதியாகிவிட்டது. எனவே, அது நேர்வதற்குள் தெய்வத்திற்கும் உலகிற்கும் தொண்டு செய்து வாழ்வதே பெற்ற பிறவிக்குப் பெருமை தருவதாக அமையும்."

* * *


அடிக்கடி மரணத்தை நினைக்க வேண்டும். மரணத்திலிருந்து யாரும் தப்புவதில்லை. கிராமத்தி லிருந்து நகரத்துக்கு அலுவலாக வரும் மக்களைப் போல, சில சில கடமைகளை இயற்றுவதற்காகவே நாம் இவ்வுலகிலே பிறக்கிறோம்......உம்மால் என்ன செய்ய முடியும்? மரணத்திற்குத் தயாராக இரும். யமன் வீட்டுக்குள் புகுந்துவிட்டான். ஈச னது தூய நாமம் என்ற ஆயுதத்தைக் கொண்டு அவனோடு நீர் போராட வேண்டும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

எவன் உடல் நீங்குவதற்கு முன்பாக ஆசை யாலும் கோபத்தாலும் எழும் மனக்கிளர்ச்சியை இங்கு இருக்கும்போதே தாங்குவதற்கு வலிமை பெற்றவனே அவன் யோகத்தில் நிலைத்தவன்; அவனே இன்பம் துய்ப்பவன்.

—கீதை, 5—23

கலியுகத்தின் வாடை



அன்று துவாபர யுகத்தின் கடைசி நாள். மறுநாள் கலியுகம் பிறக்கப் போகிறது. அர்ஜுனன் மறுநாள் கலியுகம் பிறக்கப் போவதைத் தன் அண்ணனாகிய தர்மரிடம் கூறு வதற்காக அவர் இருக்கும் அறைக்குள் சென்றான். "என்ன தம்பி?" என்று விசாரித்தார் தர்மர். "அண்ணா! நாளைய தினம் கலியுகம் பிறக்கப் போகிறது" என்றான் அர்ஜுனன். "ஆமாம் தம்பி, அதுதான் உன்னைப் பார்த்ததுமே புரிகிறதே!" என்றார் தருமபுத்திரர். அவர் சொன்னது ஒன்றும் புரியாததால், "என்ன அண்ணா?" என்று கேட்டான் அர்ஜுனன். தர்மர் அர்ஜுனனின் கால்களை அர்த்தத்துடன் நோக்கினார். வழக்கமாகத் தன் பாதரட்சைகளைக் கழற்றிவிட்டு வரும் அர்ஜுனன் அன்று ஏதோ மறதியில் அவற்றைக் கழற்றாமலே தர்ம புத்திரரின் முன்பு வந்திருந்தான். தர்மரே தொடர்ந்து, "பாதரட்சைகளை இன்று கழற்றாமலே வந்துவிட்டாயே தம்பி! நாளைப் பிறக்கப் போகும் கலியுகத்தின் வாடை இப்பொழுதே வீசுகிறதே!" என்றார். அர்ஜுனன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

—'சிவனடியான்'



தியானம்

பிரம்மசாரி முத்துக்குமார்

தியானத்தின் அவசியத்தை உலகிலுள்ள எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. காரணம், சமய சாதனைகளில் தியானம் மிகவும் உயர்ந்ததாகவும் முக்கியமானதாகவும் விளங்குகிறது. நம் நாட்டு முனிவர்களும் ஞானிகளும் தியானத்தைப் பற்றி மிகவும் ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்கள் தாம் கண்ட அனுபவ உண்மைகளை அழியாத சமய சாஸ்திரங்களாக நமக்கு அளித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் தோன்றிய தத்துவக்கோட்பாடுகள் அனைத்தும் தியானத்தின் அடிப்படையில் எழுந்தவை. இந்தியத் தத்துவ தரிசனங்களுக்கும் மேலை நாட்டுத் தத்துவங்களுக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடு, இந்தியத் தத்துவஞானிகள் மனிதனின் அக உலகை ஆராய்ந்தார்கள்; மேலைநாட்டுத் தத்துவஞானிகள் புற உலகை ஆராய்ந்திருக்கின்றனர் என்பதே ஆகும்.

விஞ்ஞானிகளின் புற உலக ஆராய்ச்சிகளின் பயனாக மனிதன் இவ்வுலகில் பெறக்கூடிய எல்லா வகையான இன்பங்களையும் பெற்றிருக்கிறான் என்பதில் ஐயம் இல்லை. நாள்தோறும் மனிதனின் சுக வாழ்வுக்காகப் புத்தம்புதிய சாதனங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. மனித உடலையும் உள்ளத்தையும் தாக்கும் புதிய நோய்கள் உண்டாகிக்கொண்டிருக்கும் அதே வேகத்தில், அந்த நோய்களைக் குணப்படுத்தும் புதிய மருந்து வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. மனநோய் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் தொகையும், மனவிரக்தியால் தற்கொலை செய்துகொள்ளும் மக்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவதாக மேலை நாடுகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களிலிருந்து அறிகிறோம். வளர்ந்து வரும் போட்டியும் பொறாமையும் பரபரப்பும் சந்தடிகளும் நிறைந்த சூழ்நிலையில் வாழும் மனிதன் அலைகடலில் சிக்கிய துரும்பு போல் பல விதங்களில் அலைக்கழிக்கப்படுகிறான். இந்த நிலையில் அவனைக் காப்பாற்றும் தோணியாகத் தியான, யோக சாதனைகள் விளங்குகின்றன.

சமீபகாலம் வரையிலும் பௌதிக விஞ்ஞானிகளில் பலர் 'தியானம் என்பது அர்த்தம் இல்லாத மதச் சடங்குகளுள் ஒன்று' என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் நெடுங்காலமாகத் தியானத்தின் தனிச் சிறப்பைப் பற்றி ஏதுமே அறியாமல் இருந்தனர். ஆனால் சென்ற நூற்றாண்டில் இந்து மதத்தில் புதிய மலர்ச்சி தோன்றியது. அது காரணமாக, இந்து மதத்தின் பல உயர்ந்த கோட்பாடுகள், தியானமுறைகள், யோகப் பயிற்சிகள் ஆகியவை பற்றி மேலைநாடுகளில் பலர் அறிய வந்தனர். சில விஞ்ஞானிகள் தியானத்தைப் பற்றி விரிவாகவே ஆராய முன்வந்தனர். அவர்கள் தமது ஆராய்ச்சிகளின் முடிவை விஞ்ஞானரீதியில் தெரிவித்திருக்கிறார்கள்.

தியானம் என்பது ஒரு மதச் சடங்கு மட்டுமல்ல; மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான, உள்ளமும் உடலும் ஒன்றாக இணைந்த ஓர் அரிய சாதனம் என்ற முடிவுக்கு இன்றைய விஞ்ஞானிகள் வந்துள்ளனர். இப்போது ஐக்கிய அமெரிக்க நாடுகள், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய பல நாடுகளில் தியானப் பயிற்சி வகுப்புக்கள் நடந்து வருகின்றன.


மனிதனின் தினசரி வாழ்க்கையில் மூன்று வகையான இயற்கை நிலைகளே உண்டு என்று இதுவரையிலும் பௌதிக விஞ்ஞானம் கருதியது. அவை: 1. விழிப்பு நிலை (waking state), 2. உறக்க நிலை (sleeping state), 3. கனவு நிலை (dreaming or hipnotic state).

வாழ்வில் காணப்படும் இந்த மூன்று நிலைகளிலும் மனித உடலில் என்ன என்ன மாறுதல்கள் உண்டாகின்றன என்பதைப் பற்றிப் பல கருவிகளின் மூலம் விஞ்ஞானிகள் ஏற்கனவே பல ஆராய்ச்சிகள்

செய்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிகளின் பயனாக, மனிதனிடம் உள்ள மூன்று நிலைகளும் தனித்தனியான வேறுபட்ட தன்மைகளைக் கொண்டனவாக அமைந்திருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.

தியானத்தின்போது உடல் உறுப்புக்களில் ஏற்படும் மாறுதல்கள்

தியானத்தைப் பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள் சில புதிய உண்மைகளைக் கண்டனர். தியான நிலையின்போது நாடித் துடிப்பிலும், இரத்த அழுத்தத்திலும் சில மாற்றங்கள் உண்டாகின்றனவாம். இரத்தத்திலுள்ள சர்க்கரைச் சத்திலும் (glucose level) மாறுதல்கள் உண்டாகின்றன. இவை தவிர மூளையில் உண்டாகும் அலைகளின் தன்மையிலும் (brain waves) குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன.



தியான நிலையின்போது உண்டாகும் மூளை அலைகள் தனித்தன்மை உடையனவாக உள்ளனவாம். இந்த நிலை, விழிப்பு நிலையும் உறக்க நிலையும் கனவு நிலையும் இல்லாத ஒரு விசேஷமான நிலை என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். இதை மனதின் நான்காவது நிலை (Fourth state of the psycho) என்று நவீன விஞ்ஞானம் சொல்லுகிறது.

உறங்காமல் உறங்கும் நிலை

விழிப்பு நிலையில் மனிதனுடைய உடல் உறுப்புக்கள் செயற்படக்கூடிய நிலையில் உள்ளன. அந்த நிலையில் மனிதன் தன் நினைவு நிலையை (Consciousness) இழந்துவிடுவதில்லை. ஆனால் உறக்க நிலையிலோ மனிதன் தன் நினைவை இழந்துவிடுகிறான். உடல் உறுப்புக்களும் அவ்வவற்றின் செயல்களைக் குறைத்து ஓய்வு கொள்கின்றன. தியான நிலையிலோ மனிதன் தன் நினைவை இழந்துவிடுவதில்லை. ஆனால் அவனுடைய உடல் உறுப்புக்களும் மூளையும் தூக்க நிலையில் உள்ளதைப் போன்று அமைதி கொள்கின்றன. ஆகவே, இந்தத் தியான நிலையை விழித்து உறங்கும் நிலை (waking sleep) என்று அழைக்கிறார்கள்.

உடலில் மேலும் சில மாற்றங்கள்

மேலும், தியானநிலையின்போது இதயத் துடிப்புக் குறைகிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. மூச்சுத் தளர்கிறது. இயற்கையாக இரத்தத்தில் உண்டாகும் லாக்டிக் அமிலம் (Lactic Acid) என்ற நச்சுப் பொருளின் அளவு குறைகிறது. தோலின் மின் தடைச் சக்தி (Electrical Resistance) அதிகரிக்கிறது. மொத்தத்தில் உறக்க நிலையில் காணப்படும் அறிகுறிகள் எல்லாம் உண்மையான தியான நிலையிலும் காணப்படும். ஆனால் மனிதன் மட்டும் தன் விழிப்பு நிலையிலேயே இருக்கிறான்.

தியான நிலையினால் மனிதன் பெறும் நன்மைகள்

உறக்கத்தினால் உடலில் புதிய தெம்பும் புத்துணர்ச்சியும் உண்டாகின்றன. உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு உறக்கம் மிகவும் அவசியமானது. தூக்கம் எல்லா உயிரினங்களுக்கும் கடவுள் கொடுத்த பெரும் வரப் பிரசாதமாகும்.

மனிதன் தியான நிலையின்போது உறக்கத்தின் மூலம் பெறும் நன்மைகள் அனைத்தையும் பெறுகிறான். அதோடு, அவன் மேலும் பல அரும் பெரும் நன்மைகளையும் பெறுகிறான். நவீன மனிதனின் வாழ்க்கையில் பரபரப்பும் சிக்கல்களும் மிகுந்து விளங்குகின்றன. மன அமைதியும் உடல் நலமும் குன்றி இன்றைய மனிதன் பலவித நோய்களால் தாக்கப்பட்டுத் துன்புறுகிறான்.

கடின வாழ்க்கையின் கூறுகள் (Diseases of stress) என்று சொல்லப்படும் இரத்த அழுத்தம், வயிற்றுப் புண், இதயநோய், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி முதலிய பல நோய்கள் இன்றைய மனிதனை வாட்டி வருகின்றன. இந்த நோய்களுக்கு உரிய புதிய கண்டுபிடிப்புக்களான மருந்து வகைகளாலும் அந்த நோய்கள் முழுவதும் குணமடைவதில்லை. இத்தகைய நோய்களை வேரோடு களைந்தெறிய, தியானத்தைத் தவிர வேறு எந்தச் சாதனமும் சிறந்ததாக இல்லை என்ற முடிவுக்குப் பல விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள்.

தியானத்தின் மகத்தான சிறப்புக்களை நவீன விஞ்ஞானம் இன்னும் நன்றாக அறிந்துகொள்ள

வில்லை. தியானம் என்பது உடலோடும் உள்ளத்தோடும் தொடர்புடைய நோய்களைப் போக்கும் சிறந்த சாதனம் என்று மட்டுமே தற்போதைய விஞ்ஞானம் அறிந்துள்ளது. முத்துக் குளிப்பவன் கடலில் ஆழ்ந்து மூழ்கும்போது தரமான முத்துக்களைப் பெறுவது போல, இந்தியத் தத்துவஞானம் என்ற பெருங்கடலில் நவீன விஞ்ஞானிகள் ஆழ்ந்து ஆராய்வார்களானால் எதிர்காலத்தில் விஞ்ஞான ரீதியில் பல உண்மைகளைக் கண்டு பிடிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

தனிமனிதனின் வாழ்க்கைக்கு மட்டுமின்றி முழு உலகுக்குமே சாந்தியையும் சமாதானத்தையும் அளிக்க வல்லது தியான முறை.

கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ராபர்ட் வாலேஸ் என்பவர் தியானத்தைப் பற்றிக் கூறுகிறார்: ''தியான நிலை நோய்களைக் குணப்படுத்துகிறது. மேலும், அது மனிதனின் உடல்திறனையும் உள்ளத்திறனையும் சிந்தனை ஆற்றலையும் அதிகரிக்கச் செய்கிறது. தியானத்தினால் ஞாபக சக்தியும் ஆக்கத்திறனும் அதிகரிக்கின்றன.''



தியானசித்தரும் சமாதியின் ஆழத்தை அறிந்தவருமான சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: ''ஆன்மாவைத் தவிர மற்றவை எல்லாம் மாறிக்கொண்டே இருக்கும். நாம் காண்பவை எல்லாமே மாறிக் கொண்டேதான் இருக்கின்றன. மாறாத அழியாத தன்மையை நாம் நமக்குள்ளேதான் காண முடியும். வேறு எங்கும் அதை நாம் காண முடியாது. என்றைக்கும் மாறாத எல்லையற்ற பேரின்பம் நமக்குள்ளேதான் இருக்கிறது. நமக்கு அதைத் திறந்து காட்டும் வாசலே தியானம் ஆகும்.

''இறுதியில் தியானம் நம்மை நம்முடைய உடல் உணர்விலிருந்து பிரித்துவிடுகிறது. முதிர்ந்த தியான நிலையில் ஆன்மா தன்னை உள்ளது உள்ளபடியே உணர்கிறது. அது பிறவாதது, அழிவற்றது, இறப்பற்றது என்ற ஞானம் அப்போது உதயமாகிறது. அதற்கு எந்தத் துன்பமும் இல்லை. எப்போதுமே அது பூரணமாகவும் சுதந்திரமாகவும் இருந்து வந்திருக்கிறது என்ற அறிவு அதற்கு உதயமாகிறது.

''தியானம் நமக்கு எத்தகைய வலிமையை வேண்டுமானாலும் தரும். இயற்கையை வெல்ல வேண்டுமா? அதைத் தியானத்தால் சாதிக்க முடியும். இந்தத் தியான முறையினாலேதான் இந்த நாளில் எல்லா விஞ்ஞான விநோதங்களும் கண்டுபிடிக்கப் பட்டு வருகின்றன. விஞ்ஞானிகள் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை நன்கு ஆராய்ந்து, அதைத் தவிரப் பிறவற்றை மறந்து நிற்கிறார்கள். அந்த நிலையில் பெரிய விஞ்ஞானக் கருத்து ஒரு மின்னல் போலத் தோன்றுகிறது. சிலர் அதைத் திருவருள் என்பர். ஆனால், உள்ளிருந்தோ புறத்திருந்தோ ஒன்றும் திடீரென்று ஏற்படுவதில்லை. சூனியத்திலிருந்து ஒன்றுமே வந்துவிடவில்லை.

''தியானம் மிகவும் தேவையான ஒன்று. தியானம் செய்க. தியானமே மகத்தானது. மனம் தியானத்தில் ஈடுபடும்போதுதான் நாம் ஆன்மிக வாழ்க்கையை நெருங்கியவராவோம். தியானம் கைகூடும் அந்த ஒரு நொடிதான் நாம் உலக அலுவல்களிலிருந்து முற்றும் விலகி நிற்கும் நேரம். அதுவே ஆன்மா தன்னைப்பற்றித் தானே நினைக்கும் நேரம். இந்த நேரம்தான் ஆச்சரியமான ஆன்மானுபவச்சுவையில் ஒரு துளியை அனுபவிக்கும் நேரம் ஆகும்.

''தியானிக்கும் மனிதனையும், தியானிக்கப்படும் இறைவனையும் இணைத்து வைக்கும் சாதனமே தியானம்.

''தியான நிலையின் எல்லையே சமாதி நிலை என்று நமது சமயநூல்கள் கூறுகின்றன. சமாதி நிலையில் மனதின் எண்ண அலைகள் (Thought Currents) முழுவதும் மறைந்துவிடுகின்றன. ஐம்புலன்களின்

செயல்கள் அடங்கிவிடுகின்றன. தெளிந்த நீர் நிலையில் முகம் தெளிவாகப் பிரதிபலிப்பதைப் போல், தெளிந்த உள்ளத்தில் ஆத்மாவே தன் முழுப் பிரகாசத்துடன் பிரகாசிக்கும். அங்கே துன்பத்திற்கோ துயரத்திற்கோ இடமில்லை. ஒரே ஆனந்தமயம். இந்த உலக இன்பங்கள் யாவும் அந்தப் பேரானந்தத்தின் சிறு திவலைகளாக மட்டுமே விளங்குகின்றன.

"இந்த நிலையில் மனிதன் யோகி ஆகிவிடுகிறான். பல நாட்கள் உணவோ உறக்கமோ சுவாசித்தலோ இல்லாமல் அவனால் இருக்க முடியும். தியானத்தில் மிக்க உயர்நிலை எய்திய யோகிகளின் அபூர்வமான சாதனைகள் மேலைநாட்டு விஞ்ஞானிகளையே திகைக்க வைத்திருக்கின்றன.

"யோகி ஒருவன் தன் உடலின் அடிப்படை மாறுபாடுகளைத் (Basic metabolism) தான் விரும்பியவாறு மாற்றி அமைக்க முடியும். தியானம், யோகம் என்பவை வெறும் சடங்குகள் என்ற எண்ணம் மாறி, அவை விஞ்ஞான உலகில் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக ஆகிவிட்டன.

"தியானம் என்பது யோகியர் ஆகிறவர்களுக்கு மட்டுமே உரியது என்பதில்லை. ஒவ்வொருவருடைய நல்வாழ்க்கைக்கும் மிகவும் அவசியமான அரும் பெரும் சாதனம் இது. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சிறிது நேரமாயினும் வெளி உலக விஷயங்களை மறந்து, மனதை ஒன்றுபடுத்தி உள் ஒளியைத் தியானிப்போமாக."

* * *

ஓம் பூர்புவஸ்ஸுவ:
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி |
தியோ யோ ந: ப்ரசோதயாத் ||

நம் அறிவைத் தூண்டுகிற அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக!

ஆசையும் அழிவும்

'நரேந்திரன்'

ஒரு நாள் இப்ராஹிம் என்ற முஸ்லிம் பக்தர் ஒரு மலையின்மீது சென்றுகொண்டிருந்தார். மலையில் ஏராளமான பழங்கள் பழுத்துக் குலுங்கும் மாதுளைமரங்கள் இருப்பதைக் கண்டார். அவற்றைப் பார்த்ததும் மாதுளம்பழம் சாப்பிட வேண்டும் என்ற அவா இப்ராஹிமுக்கு உண்டாயிற்று. ஆசைதானே அல்லலுக்குக் காரணம்!

ஒரு பழத்தைப் பறித்து உண்ண விரும்பினார்; முடியவில்லை. ஏனெனில், பழம் ஒரே புளிப்பாக இருந்தது. எனவே அதைத் தூர எறிந்துவிட்டு மேலே நடந்தார். வழியில் பாதையின் அருகில் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டார். அவருடைய உடலை ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. அவரோ ஈக்களை விரட்ட முயலவே இல்லை. இதைக் கண்டு ஆச்சரியமடைந்த இப்ராஹிம் அந்த மனிதரை வணங்கினார்.

உடனே அந்த மனிதர், "அப்பா இப்ராஹிம், நீ நலமாக இருக்கிறாயா? நீ இங்கே வந்தது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார்.

முன்பின் அறிமுகமே இல்லாத ஒருவர் தம்மைப் பெயர் சொல்லி அழைப்பதைக் கேட்ட இப்ராஹிம் ஆச்சரியத்துடன், "ஐயா, தங்களுக்கு என்னை எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதர், "கடவுளை அறிந்தவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது" என்று பதில் சொன்னார். அதைக் கேட்ட இப்ராஹிம், "கடவுளை அறிந்த தாங்கள் அதே கடவுளிடம் இந்த ஈக்களை விரட்டச் சொல்லி ஏன் கேட்கக்கூடாது?" என்று வினவினார்.

உடனே அந்த மனிதர், "இப்ராஹிம்! நீயும் கடவுளை அறிவாய். என்றாலும் நீ ஏன் கடவுளிடம் மாதுளை சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்படக்கூடாது என்று கேட்கவில்லை? ஈக்களோ உடலை மட்டுமே வருத்துகின்றன. ஆனால் ஆசைகளோ இதயத்தை அல்லவா வருத்துகின்றன!" என்றார்.



எங்கு ஒளித்தாய்?

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

இந்த நாட்டில் பலவேறு மூர்த்திகளை வழிபடுகிற வர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு வழிபடும் பல சமயத்தார்களையும் ஆறு வகையாக்கி ஷண்மத ஸ்தாபனம் செய்தார் ஆதிசங்கரர். விநாயகரைத் தலைமைத் தெய்வமாக வைத்து வழிபடும் காண பத்தியம், முருகனை முதல்வனாக வைத்துத் தொழும் கௌமாரம், சிவபெருமானைப் பரம்பொருளாக வணங்கும் சைவம், சக்தியைப் பரதேவதையாகக் கொண்டு உபாசிக்கும் சாக்தம், விஷ்ணுவை யாவருக்கும் மேலாக வைத்து வணங்கும் வைஷ்ண வம், சூரியனை வழிபடும் சௌரம் என்று ஆறு சமயங்களை வகுத்து வழிமுறைகளை அமைத்தார் அந்தப் பெருமான்.

இவ்வாறு ஆறு மூர்த்திகளை வழிபடுபவர்கள் இருந் தாலும் பெரும்பாலும் சைவம், வைஷ்ணவம் என்ற இரண்டுமே எங்கும் பரவியிருக்கின்றன. சிவன், திருமால் இருவருக்கும் தனித்தனியே உள்ள ஆல யங்களே இந்த நாட்டில் மிகுதி. வடநாட்டில் வைஷ்ணவம் மிகுதி; தென்னாட்டில் சைவம் மிகுதி.

தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் உள்ள மக்களை, "நீங்கள் என்ன மதம்?" என்று கேட்டால், ஒன்று "சைவம்" என்று சொல்வார்கள்; அல்லது "வைஷ் ணவம்". என்று சொல்வார்கள். பத்திரங்களை எழு தும்போதும் சிவமதம், விஷ்ணுமதம் என்று எழுதும் பழக்கம் இங்கே நெடுநாளாக இருந்து வருகிறது. ஒவ்வோர் ஊரிலும் சிவ விஷ்ணு ஆலயங்கள் இருக் கின்றன. இன்ன இடத்தில் சிவாலயமும் இன்ன இடத்தில் திருமால் கோயிலும் இருக்க வேண்டும் என்ற வரையறை நகர நிர்மாணத்தில் இருக்கிறது.

பல ஊர்களில் இரண்டு கோயில்களையும் ஒரு குழுவே பரிபாலித்து வரும். சைவர்கள், வைஷ்ண வர்கள் என்று சம்பிரதாயத்தில் பிரிவு இருந்தாலும் இரு சாரார்களிடத்தும் ஒற்றுமை நிலவும். தங்கள் தங்கள் வழிபடு தெய்வத்திடம் பக்தி இருக்க வேண்டுமென்றும், அதற்காக மற்றத் தெய்வங்களை இழிவு செய்யக்கூடாதென்றும் பெரியோர்கள் வற் புறுத்துவார்கள். "தெய்வம் இகழேல்" என்று ஔவையார் பாடியிருக்கிறார்.

சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சி பரவுவதற் காக எத்தனையோ வழிவகைகளையும் அமைப்புக் களையும் இந்த நாட்டில் அமைத்திருக்கிறார்கள். "அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில் மண்ணு" என்று ஒரு பழமொழியே இருக்கிறது.

பல ஊர்களில் ஒரே ஆலயத்துக்குள் சிவபெரு மான் சந்நிதியும் திருமால் சந்நிதியும் இருக்கும். சிதம்பரத்தில் நடராஜர் சந்நிதியும் கோவிந்தராஜர் சந்நிதியும் ஒரே கோயிலுக்குள் இருக்கின்றன. அப்படி உள்ள ஆலயங்கள் பல.

இதையன்றிச் சிவபெருமானும் திருமாலும் இணைந்து ஒன்றிய மூர்த்தியைச் சங்கர நாராயணர் என்று வணங்குகிறார்கள். சங்கர நயினார் கோயிலில் இந்த மூர்த்திக்குச் சந்நிதி இருக்கிறது. மாகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தில் இந்த மூர்த்தியும் ஒருவர். கேசவார்த்த மூர்த்தி என்பது திருநாமம். ஆழ்வார்களும் சிவபிரானைத் திருமால் வலப் பாகத் தில் கொண்டிருக்கிறார் என்று பாடியிருக்கிறார்கள்.

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் உந்தியிலே தோற்று வித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன்தாள் அணைகிற்பீர்; கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணிச்
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே"

என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தார்.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால்;—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

என்பது பேயாழ்வார் திருவாக்கு.

சிவபெருமானும் திருமாலும் ஒருவரே என்று கூறும் பாடல்கள் சைவத் திருமுறைகளிலும் உண்டு; திவ்யப் பிரபந்தத்திலும் உண்டு. "முனியே நான் முகனே முக்கண் அப்பா" என்பது திவ்யப் பிரபந்தம்.

"நாரணன்காண் நான்முகன்காண் நால்வே
தன்காண்"

என்பது தேவாரம்.

இவ்வாறு ஒருவராயும், பாதிப்பாதி இணைந்த ஒருவராயும் இரண்டு மூர்த்திகளையும் வைத்துப் பாடுவதோடு, இருவரையும் வேறு வேறாக வைத்துப் பாடுவதே பெரும்பான்மை. சைவர்கள் சிவனைத் திருமால் அடியான் என்றும், வைணவர்கள் திருமால் சிவனுக்கு அடியார் என்றும் சொல்லிப் பெருமைப் படுவது உண்டு.

சிவபுராணங்களைப் பார்த்தால் சிவனே பரம் பொருள் என்றும், திருமால் அவனைப் பூசித்து வழி பட்டார் என்றும் கூறும். வைஷ்ணவ புராணங்களைப் பார்த்தால் விஷ்ணுவே பரம்பொருள் என்றும், சிவ பெருமான் அவருக்கு அடியவன் என்றும் சொல்லும். சிவபுராணத்தைப் பழுத்த சைவர் பாடினர், வைஷ்ணவ புராணங்களை முறுகிய வைஷ்ணவர் பாடினர் என்று இருந்தால் அப்படிப் பாடியது இயல்பே என்று சொல்லலாம். ஆனால் இருவகைப் புராணங்களையும் இயற்றியவர் ஒருவரே. வியாச பகவானே பதினெண் புராணங்களையும் இயற்றியுள்ளார். முதலில் சிவபுராணங்களைப் பாடிவிட்டுப் பிறகு தெளிவு பிறந்து வைஷ்ணவ புராணங்களைப் பாடினர் என்று சொல்வதற்கில்லை. இரண்டையும் ஒருவரே பாடியபோது இப்படி வேறுபாடு இருக்கலாமா என்று தோன்றுகிறது.

இரண்டு புராணங்களையும் படித்தவர்கள் இரண்டு பேருமே முதல்வர்கள் என்ற முடிவுக்கு வருவார்கள். பரதெய்வம் ஒன்றாகத்தானே இருக்க முடியும்? அப்படியானால் இரண்டு தெய்வங்கள் என்பது தவறு அல்லவா? ஒருவரே இருவேறு உருவங்களில் நின்று முதன்மை பெறுகிறார்கள் என்று கொண்டால் இந்த முரண்பாட்டுக்கு இடமே இராது. "ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" என்ற சுருதி வாக்கியமும் இதைத் தானே சொல்லுகிறது?

இன்னும் ஒரு வகையில் இந்தப் புராணச் செய்திகளுக்குரிய சமாதானத்தைச் சொல்லலாம்.

இரண்டு சகோதரர்கள் நாடகத்தில் நடிக்கிறார்கள். திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் தமையனார் அரசனாகவும், தம்பி வேலைக்காரனாகவும் நடிப்பார்கள். ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனிக் கிழமைகளில் தம்பி அரசனாகவும், தமையனார் வேலைக்காரனாகவும் நடிப்பார்கள். ஓர் ஊரில் உள்ள ஒருவர் திங்கட்கிழமையன்றுதான் ஓய்வுள்ளவர். அவர் அன்று நாடகம் பார்ப்பார். தமையனாரே அரசனென்றும், தம்பி வேலைக்காரனாகவே நடிப்பவரென்றும் எண்ணிக் கொண்டிருந்தார். வேறு ஒருவர் ஞாயிற்றுக்கிழமை நாடகம் பார்க்கிறவர். அவர் தம்பிதான் அரசவேஷம் போடுகிறவரென்றும் மூத்தவர் வேலைக்கார வேஷமே போடுகிறவரென்றும் நினைத்தார்.

இவர்களுக்குப் பண்டிகை நாட்களில் ஓய்வு இருந்ததால் வழக்கமாகப் போகாத மற்ற நாட்களில் ஒன்றில் நாடகம் பார்க்கப் போனார்கள். அப்போது தெரிந்தது உண்மை. 'இரண்டு சகோதரர்களும் எப்படி வேண்டுமானாலும் வேஷம் போடுவார்கள். அவர்கள் சமமானவர்கள். இரண்டு வேஷங்களுமே போடுவார்கள்' என்ற உண்மையைத் தெரிந்து கொண்டார்கள்.

சிவபெருமானும் திருமாலும் இப்படித்தான் நாடகம் ஆடுவார்கள். அதைக் கண்டு ஏமாந்து போகக் கூடாது.

திருமாலும் சிவபெருமானும் ஒருவரே என்றும், சிவபெருமான் இடப் பாகத்தில் திருமால் இருக்கிறார் என்றும், சிவபெருமானைக் காணாமல் திருமால் தேடினாரென்றும் சிவபக்தர்கள் பாடியிருக்கிறார்கள். இந்த மூன்றும் உண்மையாக வேண்டுமானால் அவர்கள் வேறாக நின்று திருவிளையாடல் புரிவது நாடகம் என்றே கொள்ள வேண்டும்.

காரைக்காலம்மையார் இந்த மூன்று நிலைகளில் பப்பாதியாய் நின்ற தன்மையையும் திருமாலுக்கு ஒளித்து நின்றதையும் எண்ணிப் பாடுகிறார்.

இறைவனுடைய நீலகண்டத்தை அடிக்கடி நினைத்து உருகுவது அம்மையார் இயல்பு என்பதைப் பல முறை பார்த்திருக்கிறோம். அந்தக் கண்டம் நஞ்சுண்டு கறுத்திருக்கிறது. அந்தக் கருமை அவனுடைய கருணைக்கு அடையாளமாக இருக்கிறது. அது தேவர்கள் உயிரைக் காப்பாற்றியது. அதை நினைக்கும்போது பயிரைக் காப்பாற்றும் கருமேகந்தான் உவமையாகத் தோன்றுகிறது. மழை முகிலனைய திருமேனியையுடைய திருமாலைப் பற்றிச் சொல்ல வருகிறவருக்கு அந்த முகிலை இறைவன் திருக்கழுத்துக்கு உவமையாக்கும் எண்ணம் உடனே தோன்றுகிறது. அதோடு அந்தப் பெருமா

னுடைய நெற்றிக் கண்ணும் நினைவுக்கு வருகிறது. அது சிவபெருமானின் தனி அடையாளம். ஆகவே இந்த இரண்டையும் இணைத்துச் சிவபெருமானை விளிக்கிருர்.

கார் உருவக் கண்டத்து எம் கண்ணுதலே!

எம்பெருமானை ஒரு கேள்வி கேட்கத் தொடங்குகிருர். திருமாலும் சிவபெருமானும் இரண்டு பாதி சேர்ந்த ஒருவராக எங்கும் உலாவுகிறவர்கள். சிவனை எங்கே காண்போமோ அங்கே திருமாலும் இருப்பார். அவரை விட்டுச் சிவன் இல்லை; சிவனை விட்டு அவர் இல்லை.

ஓர் உருவாய் நின்னேடு உழிதருவான்.

அவர் சிவபெருமானேடு ஒன்றி இருந்தாலும் அவர் உள்ள பாதி இது என்று நன்ருகத் தெரியும். வேறுபாடு தெரியாமல் இருந்தால் சிவபெருமான் தான் இருக்கிருன் என்று சொல்லத் தோன்றும். ஆனல், இருவர் வடிவிலும் வண்ணத்திலும் வேறுபாடு தெளிவாக இருக்கிறது. சிவன் செம்மேனியான். திருமால் கருமேனியுடையவர். நீரைக் கருப்பமாகக் கொண்டு, பெய்யும் நிலையில் இருக்கும் கருமுகில் வண்ணம் திருமாலின் வண்ணம். செம்மைக்கு அருகில் கருநிறம் இருந்தால் நன்ருக எடுத்துக் காட்டும். ஆகையால் சிவபெருமான் எங்கே வந்தாலும் அவனுடைய ஒரு பாதியில் ஒட்டியிணைந்து தம் நீலவண்ணத்தைக் காட்டிக்கொண்டு திருமாலும் வருவார்.

நீர்உருவ, மேகத்தால் செய்தனைய மேனியான் நின்னுடைய பாகத்தான்.

இப்படி ஒட்டி இணைந்து இனம் கண்டுகொள்ளும் படி இருக்கும் திருமால் சிவபெருமானைத் தேடிக் காணவில்லையாம்! அவர் எப்போதும் உடம்பில் ஒரு பாதியாய் ஒட்டிக் கிடக்கும்போது அவர் காணமல் எப்படி ஒளிக்க முடியும்? எங்கே ஒளிக்க முடியும்?

திருமால் வராக உருவெடுத்துச் சிவபிரானைத் தேடினர் என்று புராணம் சொல்கிறதே! அப்படித் தேடும்படி இறைவன் எங்கே ஒளித்தான்? இது மாயவிளையாட்டுப் போலத் தோன்றுகிறதே! அம்மையார் இறைவனிடமே கேட்கிருர்.

நின்னுடைய பாகத்தான் காணமே பண்டு எங்கு ஒளித்தாய்?

இரட்டைப் பிள்ளைகளாக இருக்கும் இருவர் எப்போதும் இணைபிரியாமல் இருக்கிருர்கள். யார் கண்டாலும் இரண்டு பேரையும் காணுகிருர்கள். என்ருலும் ஒருவர் நோய்வாய்ப்பட்டு வீட்டில் படுத்திருந்தால் மற்ருெருவரே வெளியிலே வர முடியும். அப்போது ஒருவரையே காணுவார்கள். உடம்பு வெவ்வேருக இருப்பதனுல் இது சாத்தியமாகிறது.

ஆனல் இரண்டு பாதியாக ஒட்டிய ஒரே திருமேனியில் ஒரு பாதி எப்படித் தனியாக ஓடி ஒளிக்கும்? திருமால் ஒரு பாதியென்று சொல்கிறவர்கள் அவர் காணமல் சிவபிரான் ஒளித்தான் என்ருல் முரண்பாடு அல்லவா? "உன்னேடு பாதியாக ஒட்டி நிற்பவன் பார்க்க முடியாமல் நீ எங்கே ஒளித்தாய்?" என்று அம்மையார் கேட்கிருர்.

கார்உருவக் கண்டத்துஎம்
கண்ணுதலே, எங்குஒளித்தாய்,
ஓர்உருவாய் நின்னேடு
உழிதருவான், நீர்உருவ
மேகத்தால் செய்தனைய
மேனியான், நின்னுடைய
பாகத்தான் காணமே பண்டு?

[மேகத்தைப் போன்ற நிறத்தையுடைய திருக்கழுத்தையும் நெற்றியிலே கண்ணையும் உடைய எம்பெருமானே, ஒரே வடிவமாக நின்னேடு எங்கும் உலவுகிறவனும், நீரையுடைய அழகிய மேகத்தினுல் செய்தமைத்தால் போன்ற திருமேனியை உடையவனும், நின்னுடைய இடப்பாதியில் இணைந்திருப்பவனுமாகிய திருமால் பழங்காலத்தில் நின்னைக் காண முடியாமல் நீ எங்கே மறைந்தாய்?

கார் உருவம்-மேகத்தின் நிறம். எம்-எமக்கு உரிமையுள்ள. உழிதருவான்-திரிபவன். உருவ மேகம்-அழகையுள்ள மேகம்; உருவம்-அழகு. செய்தாலனைய என்றது செய்தனைய என நின்றது. பாகம் என்றது இடப்பாகத்தை. பண்டு-இறைவன் சுடருருவனுக நின்ற பழங்காலத்தில்.]

ஒட்டி இணைந்த உருவமுடையவனுக இருந்தவன் காணதபடி ஒளிந்தது பொருத்தமற்றது போலத் தோன்றும். இறைவன் பல வகை வடிவங்களை எடுத்தலும் வடிவம் இல்லாமல் இருத்தலும் அவனுடைய திருவிளையாடல்களின் வகை. அவை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகத் தோன்றினுலும், அப்படி வெவ்வேறு வகையில் தோன்றுவது உயிர்க் கூட்டங்களுக்குக் கருணை வழங்குவதற்காகச் செய்யும் அருள் திருவிளையாடல் என்று கொள்ள வேண்டும். அந்த அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி அவன் உருவெடுக்கிருன். அதற்கு எல்லை இல்லை.

-இது அற்புதத் திருவந்தாதியில் 54-வது பாடல்.

பழமொழியில் சமயக் கருத்துக்கள்

பேராசிரியர் வ. பெருமாள் எம்.ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.

தமிழ் மொழியில் பலவேறு இலக்கியங்கள் அரும்பி மலர்ந்திருக்கின்றன. அவற்றுள் பழமொழியும் ஒன்று. ஏனைய இலக்கியங்கள் கற்றோருக்கு மட்டும் உரியவை. ஆனுல் பழமொழி மக்கள் அனைவருக்குமே உரிய பொது இலக்கியமாகும். இது பழமொழிக்கு உரிய தனிப் பெருஞ் சிறப்பு.

காலத்தால் தொன்மையான பழமொழி உண்மையையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. தமிழ்ப் பழமொழியில் எல்லாக் கருத்துக்களும் செம்மையாகப் பொதிந்திருக்கின்றன. அவற்றுள் சமயக் கருத்துக்களை மட்டும் இங்கு நோக்குவோம்.

மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள ஆன்மிக உறவை விளக்குவது சமயம்.

அரிசியையும் பச்சைக் காய்கறிகளையும் உண்பதற்கு ஏற்ற முறையில் பக்குவப்படுத்தும் கலையைச் சமையல் என்று குறிப்பிடுகிறேம். 'சமை' என்னும் சொல் பக்குவப்படுத்து என்னும் பொருளைக் குறிக்கும். 'சமை' அடிப்படையாகப் பிறந்த 'சமைதல்' என்னும் சொல் அமைதல், ஆயத்தமாதல், பூப்படைதல், பக்குவமடைதல் முதலிய பொருளைக் குறிக்கும். 'சமை' என்னும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியதுதான் 'சமயம்'.

அரிசியையும் பச்சைக் காய்கறிகளையும் பக்குவப் படுத்தும் கலைக்குச் சமையல் என்று பெயர். அது போலவே விலங்குணர்ச்சியுள்ள கொடிய மனிதனைத் தெய்விகப் பண்புள்ள சான்றேனுகப் பக்குவப் படுத்தும் ஆன்மிகக் கலைக்குச் சமயம் என்று பெயர்.

சுருங்கக் கூறுமிடத்துப் பொல்லாதவனை நல்லவனுக மாற்றுவது சமயம்; மருள் நெஞ்சத்தை அருள் நெஞ்சமாக ஆக்குவது சமயம்; கல் உள்ளத்தைக் கனி உள்ளமாக ஆக்குவது சமயம்; பகைமையைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்குவது சமயம்; கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள ஆன்மிக உறவாகிய பக்தியை மனிதனின் உள்ளத்தில் ஊட்டுவது சமயம். 'எம்மதமும் சம்மதம்' என்பதே சமயத்தின் தலையாய குறிக்கோள்.

'இறைவன் ஒருவனே' என்னும் அடிப்படைக் கொள்கை கடவுள் மீது நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோருக்கும் உடன்பாடானது. இறைவனைப் பற்றிக் குறிப்பிடுகிற பழமொழிகள் யாவும் இறைவனை ஒருமையில் குறிப்பிடுகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் பழமொழி இந்த உண்மையைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது.



இறைவன் ஒருவனே; ஆனுல் பெயர்கள் பல. குறிக்கோள் ஒன்றே; ஆனுல் நெறிகள் பல. வீட்டிலுள்ள மின்சாரம் ஒன்றே; ஆனுல் வெளிப்படும் முறைகள் பல. விளக்கின் வழியாக மின்சாரம் வெளிப்படும்போது ஒளியாகக் காட்சியளிக்கிறது. வானெலிப் பெட்டி வாயிலாக வெளிப்படும்போது இசையாகக் காட்சியளிக்கிறது. விசிறியின் மூலமாக வெளிப்படும்போது இனிய காற்ருக வீசுகிறது. வெப்பக் கருவி (electric heater) மூலமாக வெளிப்படும்போது வெம்மையாகத் தென்படுகிறது. மின்சாரத்தின் வெளிப்பாடுகள் பல வடிவங்களில் இருந்தாலும் மின்சாரம் ஒன்றே என்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அதுபோல அருள், ஆற்றல், அறிவு முதலிய பலவேறு வடிவங்களில் கடவுள் வெளிப்பட்டாலும் கடவுள் ஒருவனே என்னும் பேருண்மையை நாம் உள்ளத்தில் நன்கு பதிய வைத்தல் வேண்டும். 'அரியும் சிவனும் ஒன்று, அதை அறியாதவன் வாயிலே மண்ணு' என்பது பழமொழி.

உலகம் தோன்றுவதற்கு மூலகாரணமானவன் இறைவன். இறைவனுக்கு 'ஆதி' என்னும் பெயரும் உண்டு. ஆதி என்னும் சொல் தொடக்கத்தைக் குறிக்கும்.

சாகப் போகிற காலத்தில் சங்கரா சங்கரா என்பதைவிட, வெள்ளம் தலைக்கு மேல் ஓடும்போது

அணைபோட முயல்வதைவிட, ஏற்ற காலத்தில் ஆண்டவனைத் தொழுதல் வேண்டும் என்னும் சமய நீதியை நம் பழமொழி உணர்த்துகிறது. 'ஐந்து வயதில் ஆதியை ஓது' என்பதே அந்தப் பழமொழி. ஒரு கருத்தை அறிவதற்கும் உணர்வதற்கும் உரிய காலமும் ஏற்ற பருவமும் அதுவேயாகும். அதாவது ஐந்து வயது. ஐந்தில் அறியாதவன் ஐம்பதில் அறிவானா? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இந்தப் பழமொழிகள் இந்த உண்மையை உறுதிப் படுத்துகின்றன.

சமயம் என்பது கல்வியின் ஒரு பகுதியன்று; அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. வழக்கறிஞர் வழக்குகளையும் சட்டத்தையும் அறிந்திருந்தால் போதும். அவர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதைப் போலவே ஏனைய துறைகளில் உள்ளவர்களும் தத்தம் துறைகளைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தால் போதும். அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்று அவசியம் இல்லை. ஆனால் சமயம் அவ்வாறன்று. சமயம் என்பது வெறும் ஏட்டு நெறியோ அறிவு நெறியோ அன்று; அது வாழ்க்கை நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்தே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் 'படிப்பது இராமாயணம்; இடிப்பது பெருமாள் கோயில்' என்னும் பழமொழிக்கேற்ப வாழ்க்கை அமைந்துவிடும்.

தமிழகத்தில் தோன்றிய சமயப் பெரியோர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். இவர்களைச் சமயக் குரவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு. இறைவனை ஆண்டையாகவும் தம்மை அடிமையாகவும் கருதி உழவாரப் படை கொண்டு உள்ளன்புடன் தொண்டு புரிந்தார் அப்பர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் உயர்ந்த கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர் அப்பர். அவர் பின்பற்றிய நெறி அடிமை நெறி அல்லது தாஸ மார்க்கம். இளவயதில் இறைவன் அருள் பெற்றவர் ஞானசம்பந்தர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை ஞானசம்பந்தரைச் சாரும். அவர் இறைவனைத் தந்தையாகவும் தம்மை மகனாகவும் கொண்டு ஒழுகினார். அவர் கடைப்பிடித்த நெறி தந்தை மகன்மை நெறி அல்லது ஸத்புத்திர மார்க்கம். சுந்தரர் இறைவனைத் தம் தோழனாக மதித்து ஒழுகினார். 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் உரிமையுடன் பாடுவது இங்கு நோக்கத் தக்கது. அவர் பின்பற்றிய நெறி தோழமை நெறி அல்லது ஸக மார்க்கம். அறிவின் வடிவமாக விளங்கும் இறைவனை அறிவு நெறியில் வழிபட்டவர் மாணிக்கவாசகர். அவர் இயற்றிய திருவாசகத்தின் இனிமையை இராமலிங்க அடிகள் உளம் உருகிப் பாடுகிறார்:-

> வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
> நான்கலந்து பாடுங்கால் நறுகருப்பஞ் சாற்றினிலே
> தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீம் சுவை
> கலந்துஎன்
> ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. மாணிக்கவாசகர் பின்பற்றிய நெறி அறிவு நெறி அல்லது ஞானமார்க்கம். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் முறையே அடிமை நெறி, தந்தை மகன்மை நெறி, தோழமை நெறி, அறிவு நெறி ஆகிய நெறிகளைப் பின்பற்றினர். 'நாலு பேர் போன வழியில் நாம் போக வேண்டும்' என்பது பழமொழி. 'நாலு பேர்' என்பது சமயக் குரவர் நால்வரைக் குறிக்கும். அந்த நால்வரும் போன வழி நல்ல வழி.

பற்று இரு வகைப்படும். ஒன்று அகப்பற்று, மற்றொன்று புறப்பற்று, 'நான்' என்பது அகப்பற்று. 'நான் உயர்ந்தவன், நானே தலைவன்' என்பவை அகப்பற்றிலிருந்து எழுந்த ஆணவ மொழிகள். 'என் பொருள், என் வீடு, எனது சொத்து' முதலியவை புறப்பற்றுக் காரணமாக எழுந்த ஆசை மொழிகளாகும். இவ்விரு வகைப் பற்றையும் செருக்கையும் அறவே ஒழித்தவன் உயர்நிலையை அடைவான்.

> யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்

என்று குறள் பாடுகிறது. இருவகைப் பற்றையும் மூவகை ஆசையையும் அறவே துறந்தவனே துறவி. மனதை அடக்கிய துறவியுடன் உலகத்தையே வென்ற வேந்தனை ஒப்பிட்டுப் பார்த்தால், வேந்தன் துறவிக்கு முன்பாகத் துரும்பாகவே காட்சியளிப்பான். 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பது பழமொழி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் நம் முன்னோர் உறுதிப் பொருள்களாகக்

கருதினர். ஒருவன் விடுபேற்றை அடையத் தவம் புரிய வேண்டியதில்லை; காவியுடை அணிந்து கொண்டு கானகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. பற்றை அறவே நீக்கிவிட்டால் விடுபேறு தானுகவே கிட்டும். இந்தப் பேருண்மையை 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் பழமொழி நன்கு தெளிவாக்குகிறது.

'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பது அனைவரும் நன்கறிந்த பழமொழி. காற்று அடிக்கும்போதே நெல் முதலிய தானியங்களை நன்ருகத் தூற்றிக்கொள்ள வேண்டும் என்பது இந்தப் பழமொழியின் சொற்பொருளாகும். வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்பது இதன் உட்பொருள். ஆன்மிகக் கண் கொண்டு இந்தப் பழமொழியை ஆராய்ந்தால் இதன் சொற்பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் நுண்பொருள் புலனுகும். காற்றுள்ளபோது நெல்லைத் தூற்றினுல் தூய நெல் மட்டும் நிலத்தில் தங்கிவிடும். பதர், தூசி முதலியவை காற்ருேடு போய்விடும். அதைப் போலவே ஒருவன் தன் மூச்சு (காற்று) உள்ளபோதே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களையும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் போக்கிக் கொள்ள வேண்டும். நெல்லைத் தூற்றும்போது நெல் மட்டும் தங்கிப் பதர் நீங்குவதைப் போல, தூய அறிவு மட்டும் நிலைபெற்று நின்று, அறியாமை முதலியவை நீங்கிவிடும். காற்று நின்றுவிட்டால் தூற்ற முடியாது. மனிதனின் மூச்சுக் காற்று நின்றுவிட்டால் அவன் தன்னிடமுள்ள குற்றங்களைப் போக்கிக்கொள்ள இயலாது.

'இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்பது மற்ருெரு பழமொழி. ஒருவனுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால் அவன் எல்லாவற்றையும் கேட்பான் என்று நாம் இந்தப் பழமொழிக்குப் பொருள் கூறுகிரேம். இந்தப் பழமொழியை 'இருக்க இடம் கொடுத்தால் படுக்கப் பாய் கேட்பான்', 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது' ஆகிய பழமொழிகளுக்கு இணையாகக் கருதுகிரேம். இந்தப் பழமொழியை ஆழ்ந்து நோக்கினுல் இதன் ஆன்மிக நுண்பொருள் தெளிவாகும். இறைவனுக்கு நம் உள்ளத்தில் இருக்க இடம் கொடுத்தால் அவன் நம் அறியாமையைப் (மடம்) பிடுங்குவான் என்பதே இப் பழமொழியின் மெய்ப்பொருள். இத்தகைய பழமொழிகள் இன்னும் பல இருக்கின்றன. இவற்றைத் தத்துவக் கண் கொண்டு ஆராய்ந்தால் இவற்றின் சொற்பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் மெய்ப்பொருள் புலனுகும்.

ஆற்றல் இருந்தால் செய், இல்லாவிட்டால் சும்மா இரு என்று சொல்வதற்குப் பதிலாகச் '**சக்தி** இருந்தால் செய், இல்லாவிட்டால் **சிவனே** என்று இரு' என்னும் பழமொழியைப் பயன்படுத்துகிரேம். பெண்ணின் வடிவமாக விளங்கும் சக்தி இயக்குகிருள். ஆணின் வடிவத்தில் இருக்கும் சிவன் இயங்குகிருன். பெண்மையையும் தாய்மையையும் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்தப் பழமொழி சிலேடை நயத்துடன் சிறந்து விளங்குகிறது.

தமிழில் சமயத்தைப் பற்றிய பழமொழிகள் மிகுதியாக இருக்கின்றன. இவை யாவும் சிந்தனையின் சாரமாகவும் அறிவின் பிழிவாகவும் அமைந்து கற்போர்க்குப் பெருவிருந்து அளித்தவண்ணம் இருக்கின்றன. இந்தப் பழமொழிகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து பயன் அடைதல் தமிழரின் தலையாய கடமையாகும். *

செய்திகள்

கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஆசியோடும் வழிகாட்டுதலோடும் ஆர்க்காட்டில் 'ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம்' உத்வேகத்துடன் இயங்கி வருகிறது. அம்மன்றத்தின் சார்பாக 7-6-78ஆம் நாள் 'ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா' என்ற பெயரில் நர்சரிப் பள்ளித் துவக்கப்பட்டது. பள்ளியைத் துவக்கி வைத்து ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தர் உரை நிகழ்த்தினுர். மற்றும் ஸ்ரீமத் சுவாமி ராகவேசானந்தர், பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

* * * * * *

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குயிலம் கிராமத்தில் 18-6-78ஆம் நாள் 'ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த உழவர் மன்றம்' என்ற அமைப்பை ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தர் துவக்கிவைத்தார். விழாவில் ஸ்ரீமத் சுவாமி குமரானந்தரும் சுவாமி ராகவேசானந்தரும் சிறப்புரை ஆற்றினர். ஞாயிறு தோறும் இம்மன்றத்தின் சார்பாகக் கூட்டு வழிபாடும் சமயச் சொற்பொழிவுகளும் நடந்து வருகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

1978 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீமத் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஜயந்தி விழா :

1-8-78 செவ்வாய் — **திதி பூஜை:**
காலை 8 மணி முதல் 11 மணி வரை விசேஷ பூஜை, ஹோமம் முதலியன

6-8-78 ஞாயிறு — மாலை 4-30 முதல் 5 வரை
பஜனை: திரு ராமசுவாமி பாகவதர் குழுவினர்
மாலை 5 மணி முதல் 7 மணி வரை **பொதுக் கூட்டம்**

பொதுக் கூட்டம்

தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
பேசுவோர் : 1. சுவாமி புதானந்தர் (ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், டெல்லி)
2. மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி நய்னார் சுந்தரம்

சைவ சித்தாந்தம் பற்றிய கருத்தரங்கு:

2-8-78 புதன்கிழமை முதல்
5-8-78 சனிக்கிழமை வரை — நாள்தோறும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை சுவாமி தபஸ்யானந்தரின் தலைமையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ''சைவ சித்தாந்தம்'' பற்றிய கருத்தரங்கம் நடைபெறும்.

பங்கு கொள்வோர்

2-8-78 புதன்
1. **சைவ சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகள்** — டாக்டர் வி. ஏ. தேவசேனாபதி
2. **சிவலிங்க வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்** — திரு கி. வா. ஜகந்நாதன்

3-8-78 வியாழன்
1. **வீர சைவம்** — திரு ஆர். ரத்தினசபாபதி
2. **நாற்பாதங்கள்** — பேராசிரியர் பி. இராமன்

4-8-78 வெள்ளி
1. **சைவாகமங்கள்** — திரு எம். அருணாசலம்
2. **பஞ்சாட்சர மகிமை** — திரு ந. ரா. முருகவேள்

5-8-78 சனி
1. **சைவ சாத்திரங்கள்** — பேராசிரியர் டி. என். கணபதி
2. **சைவத் திருமுறைகள்** — பேராசிரியர் ஈ. சுப்பிரமணியம்

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி விழா :

25-8-78 வெள்ளி — கோகுலாஷ்டமி பூஜை [மாலை வழிபாட்டிற்குப் பிறகு]
27 8-78 ஞாயிறு — **பொதுக் கூட்டம் – ''ஸ்ரீகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும்''**
தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
பேசுபவர் : திரு டி. என். சம்பத்குமார்

சத் சங்கம் : ஞாயிறுதோறும் — மாலை 4 மணி முதல் 8 மணி வரை
மாலை 4 முதல் 4-20 வரை — ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் [13-8-78]
மாலை 4-20 முதல் 4-30 வரை — ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் [20-8-78]
மாலை 4-30 முதல் 5-30 வரை — சொற்பொழிவு [தமிழ்]
1 **ஸ்ரீமத் பாகவதம் :** — திரு 'அண்ணா' சுப்ரமண்யம் [13-8-78]
2. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்** — திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் [20-8-78]

மாலை 5-35 முதல் 6-30 வரை — சொற்பொழிவு [ஆங்கிலம்]
1. **ஸ்ரீபகவான் ராமகிருஷ்ணர்** — சுவாமி தபஸ்யானந்தர் [13-8-78]
2. **ஸ்ரீமத் பகவத் கீதை** — சுவாமி கபீரானந்தர் [20-8-78]

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள் — [மாலை 5-45]

திங்கள்: — பக்தியோகம் — சுவாமி அமிர்தானந்தர் [ஆங்கிலம்]
செவ்வாய்: — ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம் — சுவாமி கபீரானந்தர் [ஆங்கிலம்]
புதன்: — மகாபாரதம் — திரு 'அண்ணா' சுப்ரமண்யம் [தமிழ்]

வியாழன்:	ஸ்ரீமத் பகவத் கீதை—சுவாமி தன்மயானந்தர் [தமிழ்]
வெள்ளி:	ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா [தமிழ்]

சிறப்புச் சொற்பொழிவுகள்:
சனிக்கிழமைகளில்

1. **ஸ்ரீராமகிருஷ்ண கதாமிர்தம்**—திருத. ராதாகிருஷ்ணன் [12-8-78]
2. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—சுவாமி கீர்த்திதானந்தர் [19-8-78]
3. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு பி. இராமகிருஷ்ணன் [26-8-78]

விசேஷ தினங்கள்

18-8-78 வெள்ளி:	சுவாமி நிரஞ்ஜனானந்த ஜயந்தி
20-8-78 ஞாயிறு:	அந்தர் யோகம் [சாதனை தினம்]

ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம்: **ஏகாதசி தினங்களில்** மாலை வழிபாட்டிற்குப் பிறகு [14-8-78 & 29-8-78] மாலையில் நடைபெறும்.

நகரத்தில் நடைபெறும் வேறு சில நிகழ்ச்சிகள் :

12-8-78 சனி மாலை 7 மணிக்கு	**பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்** — சுவாமி தன்மயானந்தர் இடம் : அண்ணா நகர், பிளாட் 4547, (West border of tower).
12-8-78 சனி மாலை 7 மணிக்கு	**ஸ்ரீமத் பகவத் கீதை** — சுவாமி ராகவேசானந்தர் இடம் : இல. 18, 9வது லேன், சாஸ்திரி நகர்,
12-8-78 சனி மாலை 7 மணிக்கு	**ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்** — சுவாமி அமலாத்மானந்தர் இடம் : வங்காளி அசோசியேசன், 25, கிரி ரோடு, தி. நகர்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலை பேசி : 71231

தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

OUR ENGLISH PUBLICATIONS

ON SRI RAMAKRISHNA

	Rs. P.
SRI RAMAKRISHNA, THE GREAT MASTER	45.00
THE GOSPEL OF SRI RAMAKRISHNA	45.00
SRI RAMAKRISHNA—A Biography	5.00
SRI RAMAKRISHNA AND HIS MISSION	1.25
SAYINGS OF SRI RAMAKRISHNA *(Ordy.)* 8.00 *(Calico)*	13.00
SRI RAMAKRISHNA AS SWAMIJI SAW HIM	2.50
SRI RAMAKRISHNA UPANISHAD	3.50
TALES AND PARABLES OF SRI RAMAKRISHNA	8.00
WORSHIP OF SRI RAMAKRISHNA	1.00
VISIONS OF SRI RAMAKRISHNA	4.50
SRI RAMAKRISHNA KARNAMRITAM	4.50
SRI RAMAKRISHNA LEELASTHANAS	1.75
SRI RAMAKRISHNA PARAMAHAMSA	2.40
GEMS FROM THE GOSPEL OF SRI RAMAKRISHNA	0.40
SRI RAMAKRISHNA—(Illustrated)	0.35

ON SRI SARADA DEVI :

SRI SARADA DEVI, THE HOLY MOTHER *(Ordy.)* 14.00 *(Deluxe)*	28.00
HOLY MOTHER SRI SARADA DEVI *(Ordy.)* 18.00 *(Deluxe)*	35.00

ON & BY SWAMI VIVEKANANDA

SWAMI VIVEKANANDA : AWAKENER OF MODERN INDIA	2.50
EDUCATION	2.75
HINDUISM	2.50
INSPIRED TALKS	5.00
WOMEN OF INDIA	0.25
VIVEKANANDA SPEAKS TO YOU	1.00
VOICE OF VIVEKANANDA	0.40
SWAMI VIVEKANANDA	2.40
VIVEKANANDA WRITES TO YOU	1.00

ON & BY DIRECT DISCIPLES OF SRI RAMAKRISHNA

THE ETERNAL COMPANION	(In press)
SWAMI TURIYANANDA	4.50
SWAMI RAMAKRISHNANANDA	4.50
THE ANCIENT QUEST	2.50
CONSOLATIONS	0.50
FOR THINKERS ON EDUCATION	4.00
GOD AND DIVINE INCARNATIONS	3.75
(Superior)	7.00

	Rs. P.
MESSAGE OF ETERNAL WISDOM	(In Press)
PATH TO PERFECTION	0.60
SRI KRISHNA THE PASTORAL & KINGMAKER	2.00
LIFE OF SRI RAMANUJA *(Ordy.)*	12.00
(Deluxe)	22.00
PATH BEYOND SORROW	0.25

SRIMAD BHAGAVAD GITA

THE ETHICAL PHILOSOPHY OF GITA	4 00
BHAGAVAD GITA, THE SONG OF GOD	4.50
SCIENCE OF HUMAN DEVELOPMENT THE BHAGAVAD GITA	3.50

THUS SPAKE SERIES :

THUS SPAKE THE BUDDHA	0.80
THUS SPAKE THE CHRIST	0.80
THUS SPAKE THE HOLY MOTHER	0.80
THUS SPAKE SRI KRISHNA	0.80
THUS SPAKE PROPHET MOHAMMAD	0 80
THUS SPAKE SRI RAMA	0.80
THUS SPAKE SRI RAMAKRISHNA	0.80
THUS SPAKE SRI SANKARA	0.80
THUS SPAKE VIVEKANANDA	0.80
THUS SPAKE VEDAS	0.80
THUS SPAKE GURU NANAK	0.80

MISCELLANEOUS :

HINDUISM : ITS MEANING FOR THE LIBERATION OF THE SPIRIT	7.50
VEDIC RELIGION & PHILOSOPHY	4.50
ADVENTURES IN RELIGIOUS LIFE *(Ordy.)* 8.00 *(Calico)*	12.00
THE SPIRITUAL HERITACE OF TYAGARAJA *(Ordy.)* 12.50 *(Calico)*	14.00
SRIMAD BHAGAVATAM—THE WISDOM OF GOD *(Ordy.)* 6.00 *(Calico)*	10.00
THE RAMAKRISHNA MATH & MISSION : ITS IDEALS & ACTIVITIES	1.50
SRIMAD RAMAYANA	6.00
SERMON ON THE MOUNT ACCORDING TO VEDANTA	4.00
NARADA'S WAY OF DIVINE LOVE	5.00
NARAYANEEYAM *(Ordy.)* 15.00 *(Calico)*	25.00
NAGAMAHASHAYA *(Ordy.)* 3.50 *(Superior)*	7.00
MEDITATION	7.50
HOW TO KNOW GOD	5.50
YOGA FOR BEGINNERS *(Ordy.)*	7.00
(Deluxe)	15.00
SPIRITUAL LIFE	0.10

SRI RAMAKRISHNA MATH :: MYLAPORE, MADRAS-600004

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ உண்மையைத் தவிர வேறு அழகு கிடையாது.

★ தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

★ கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும், முழு அளவில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

★ சுயமாகத் தியாகம் செய்யும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

★ மனதை அலட்டிக் கொள்வதைப் போல, உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை. கடவுளிடம் ஒருவனுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், அவன் எதை நினைத்தும் மனதை அலட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுவான்.